www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1 – 15 பிப்ரவரி '88

3 - 6

விலை : ரூ. 1


மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்




அன்புள்ள ஆசிரியருக்கு,

● புதிய ஜனநாயகம் ஜனவரி 16-31 இதழில் மாஜி துக்ளக் வாசகர்களின் கடிதம் கண்டேன். 'சோ'வின் உண்மையான முகத்தை தெரிந்து கொள்ளாமல் இன்னும் நிறைய கூட்டம் அந்தக் குப்பை ஏட்டினை சுமந்துகொண்டு திரிகின்றன. ஈழப்பிரச்சினை மட்டுமல்ல, வேறு எந்த அரசியல் பிரச்சினையிலும் சுயலாப நோக்குடன் ஆதாயம் தேடும் அற்ப பிறவிதான் சோ. அவன் திருடன், இவன் திருடன், அவன் பேமானி என்று சுட்டுவிரலை பிறர்நோக்கி காட்டிவிட்டு, தன்னுடைய யோக்கியதையை பிறர் விமர்சிக்க இந்த இழிபிறவி இடங்கொடுப்பதில்லை. இந்தியாவின் தலைநகர் மாஸ்கோ என்று இந்திராவின் ரஷிய சார்பை விமரிசித்த இவருக்கு அமெரிக்காவைப் பற்றி எழுத கைகள் நடுங்குகிறது. மெரீனாவில் மீனவர்கள் சுடப்பட்டு இறந்தபோது போலீஸ் காட்டுமிராண்டிகளின் செய்கையை நியாயப்படுத்திய இவர், ஈழத் தமிழர்களையும் சீரங்கத்துப் பார்ப்பனர்களையும் என்றைக்குமே ஒன்றாகப் பார்த்தது கிடையாது. பிரபாகரனின் ஆயுதப்போராட்டத்தை விமர்சிக்கும் இந்த கபோதிக்கு ஆர்.எஸ்.எஸ் குண்டர்களின் ஆயுதப்பயிற்சி மட்டும்ஏனோ தெரிவதில்லை. எம்ஜிஆர் சாராய ஊழல் புரிந்தால் அது தவறு; பதவி விலக வேண்டும் என்ற இந்த பச்சோந்தி, ஹெக்டே சாராய ஊழலில் மாட்டிக்கொண்டு பின்னர் 'ஸ்டண்ட்' அடித்து பதவியில் மீண்டும் ஒட்டிக் கொண்டதை பெருந்தன்மை என்று புகழ்கிறது. இந்த சீரழிந்த துரோகியிடம் பத்திரிக்கை தர்மத்தை எதிர்பார்த்த மாஜி துக்ளக் வாசகர்களின் அறியாமைக்காக அனுதாபப் படுகிறேன்

மாவோ தமிழ்மணி　　தஞ்சாவூர்

● ஜனவரி 16—31 இதழில் விமர்சனமா? வெறியா என்ற பகுதியில் அம்பேத்கார் பக்தர்களின் கடிதங்களைப் படித்தேன். உண்மையைத் தெரிந்து கொள்வதற்குப் பதில் அவர்கள் வெறியைக் கக்கியுள்ளார்கள். அம்பேத்காரை விமர்சிக்க மனிதர்களுக்குத் தகுதி இல்லை; புத்தருக்குத்தான் உண்டு என்று கருதுகிறார்கள் போலும். எனக்குத் தெரிந்தவரையில் 'சிறுத்தைகள்' பலர் வேலை கிடைத்தவுடன்சேரிப் பக்கம் திரும்புவதேயில்லை. தங்கள் தகுதிக்கும் சம்பளத்திற்கும் ஏற்ற பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்கிறார்களே தவிர தாழ்த்தப்பட்ட சாதியிலேயே ஏழைப் பெண்ணைத் திருமணம் செய்ய முன் வருவதில்லை. அதிலும் 'சக்கிலி'சாதியைச் சேர்ந்தவர்களை இவர்கள் வீடுகளில் உள்ளே வரக்கூட அனுமதிப்பதில்லை. இந்நிலையில் அறியாமையால் சீறும் இச்சிறுத்தைகளுக்கு நீங்கள் பொறுமையுடனும் பொறுப்போடும் சரியான விளக்கமளித்துள்ளதைப் பாராட்டுகிறேன்.

கவிதா　　திருபுவனை

● அமபேத்கா மிகப்பெரிய புரட்சியாளராக இருந்திருந்தால் நேருவின் மந்திரிசபையில் எப்படி இடம் பெற்றிருக்க முடியும்? ஒருவேளை இவர்கள் கண்ணோட்டப்படி நேருவும் இமாலயப் புரட்சியாளர் போலிருக்கிறது!

பெருமாள்　　வேலூர்.

● எலலா சாதியினரும் அவரவர் சாதியில் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவர்களிடம் காட்டும் விசுவாசமும் அடிமைத்தனமும் பரம்பரை பரம்பரையாக நம் இந்திய மக்களிடம் ஊறிப்போய் கிடக்கிறது. இந்நிலையில் அம்பேத்காரை முதலாளித்துவ சீர்திருத்தவாதி என்று நீங்கள் சொன்னால் அவர்கள் கோபப்படத்தான் செய்வார்கள். இத்தனை காலம் அடிமைப்பட்டபின்னும் விடுதலைக்கான சரியான வழியைத்தேடாமல், அநாகரிகமாக விமர்சிக்கும்இவர்கள் எப்போதுதான் விழிப்படையப் போகிறார்களோ? ஆனாலும் தளர்ந்துவிடாமல் பாமர மக்களும் புரிந்து கொள்ளுமாறு கம்யூனிச கருத்துக்களை தொடர்ந்து பரப்புங்கள்.

திலகவதி　　விழுப்புரம்

● அம்பேத்கார் பற்றிய கட்டுரைக்கு மறுப்புகளையும் வெளியிடுவதே ஜனநாயக நியதி என்றாலும், ஒருவரின் தாய்—தகப்பனையும் பிறப்பையும் பற்றி கீழ்தரமாக எழுதும் இவர்களின் பிதற்றலை நீங்கள் வெளியிட்டிருப்பது மிகவும் வேதனையளிக்கிறது. இதிலும் ஒருவர், மாஜி வாசகர் எனக்குறிப்பிட்டு தனது அறிவாற்றலை பறைசாற்றியுள்ளார். இவரெல்லாம் புதியஜனநாயகத்தின் வாசகராய் இருந்ததற்காக எங்களையும் வெட்கப்பட வைத்து விட்டார்.

விலையேற்றம் பற்றிய தலையங்கக் கட்டுரை மிகமிக யதார்த்தமான மறுக்கமுடியாத அனைவராலும் ஏற்கப்படுகிற உண்மையாகும். யாருக்கு யார் ஆசான் என்ற கட்டுரையின் மூலம், துக்ளக்கில் வெளியான கம்யூனிசம் தேய்கிறது என்ற கட்டுரையின் முகத்திரையை கிழித்தெறிந்து விட்டீர்கள்.

உண்மை வாசகன்　　நெய்வேலி

● பாசிச எம்ஜிஆரின் சாவுக்கு நீலிக்கண்ணீர் வடிக்கும் ஓட்டுப் பொறுக்கிகளின் ஆரவாரத்துக்கு மத்தியில் அரசியல் ரீதியாக எம்ஜிஆரின் கபட வேடத்தை—முகத்திரையைக் கிழித்தெறிந்த புதியஜனநாயகத்துக்குப் புரட்சி வாழ்த்துக்கள்! மக்கள் விரோதிகளின் மரணம் இறகைவிட இலேசானது என்பதை உழைக்கும் மக்கள் உணரும்காலம் வெகுதொலைவில் இல்லை.

அறிவுமணி　　ஊற்றங்கரை

(இதே கருத்துக்களை மதுரை பாஸ்கர், கணேஷ், கோவிந்தராசு ஆகிய வாசகர்கள் குறிப்பிட்டுள்ளனர்)

● இதழ் எண் 2ல் வாரிசு ஆட்சி பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது. போலிக்கம்யூனிஸ்டுகள் ஆளும் மாநிலங்களில் வாரிசு ஆட்சி இல்லையென்றாலும் அரசு எந்திரத்தில் அவர்களது பங்கு பற்றி குறிப்பிட்டிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும். கானத்தூர் மக்களின் போராட்டத்தைப் போன்று, கிராமப்புற மக்களின் போராட்டங்கள் பற்றிய செய்திக் கட்டுரைகளை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

வரசகர்வட்டம்　　கல்லை

● ராஜீவ்—அமிதாப் கும்பலின் கொள்ளை, அதை மூடிமறைக்கும் தாக்கர்—நடராஜனின் விசாரணை நாடகம், ஓட்டுக்கட்சிகளின் மறைமுக ஆதரவு—இவற்றை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தியது சிறப்பானது. தற்செயலாக புதிய ஜனகம்கிடைத்து படித்துப் பார்த்தேன். உங்கள் எளிமையையும் துணிவையும் பாராட்டுகிறேன். இனிநான் உங்கள் வாசகன்.

வேல்முருகன்　　சங்கராபுரம்.

● ஈழ ஆதரவு இயக்கத்தினர்மீது காங்கிரசு குண்டர்கள் கொலை வெறியோடு தாக்கிய செய்தியை எள்ளளவும் பூசிமெழுகாமல் உண்மையை வெளியிட்டுள்ளீர்கள். அந்நிகழ்ச்சியில் பாதிக்கப்பட்டவர்கள் திராவிடக் கழகத்தவர்என்ற போதிலும், ஈழப்பிரச்சினையில் உங்களிடமிருந்து மாறுபட்ட அணுகுமுறையை அவர்கள் கொண்டிருந்த போதிலும் நியாய உணர்வுடன் செய்தியை வெளியிட்டு உங்கள் பத்திரிக்கையின் நேர்மையை நிருபித்துவிட்டீர்கள்.

இரா. பாஸ்கரன்
மற்றும் வாசகர்கள்　　நெய்வேலி



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய—லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

6

1—15 பிப்ரவரி' 88

உள்நாடு
தனி இதழ் : ரூ 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் ரூ 6
ஆண்டு சந்தா ரூ 144.

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத்தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர் 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை—600 015.

# புனிதம் எங்கே போனது?

இறந்து போன தமிழக முதலமைச்சர் எம்ஜிஆருக்கு ஒரு வகையில் நன்றி சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம்! எதிர்மறையில் அவர் நமக்காக ஒரு அரியகாரியம் செய்து விட்டுப் போயிருக்கிறார்! நாடாளுமன்ற—சட்டமன்றஜனநாயகத்தின் ஓட்டாண்டித்தனத்தை, மாயையை, கபடவேடத்தை நார் நாராகக் கிழித்து அம்பலப்படுத்திவிட்டுப் போயிருக்கிறார், தனது வாழ்விலும் சாவிலும்! எம்ஜிஆரின் பத்தாண்டுகால பாசிச, ஆபாச—வக்கிர, குரூர, கோமாளி ஆட்சியின் சாதனை இது! அவர் விட்டுப் போனபாரம்பர்யம் இன்னும் அந்த அரிய பணியைத் தொடர்கிறது. தமிழக மக்கள் தெளிந்து இன்னும் விழிப்புணர்வு பெறவில்லையானால் அது புரட்சிகர இயக்கங்களின் பலவீனத்தையே குறிக்கும்.

ஓட்டுக் கட்சிகளின் யோக்கியதை என்னவென்று நாளும் அவர்களது அரசியல் பித்தலாட்டங்கள் வெளிப்படுத்துகின்றன. மக்கள் அறிந்தே வருகிறார்கள். ஓட்டுக் கட்சிகளின் அரசியல் பேரங்கள், தரகுவேலைகள், அரசியல் ரௌடித் தனங்கள், சுயநல—சுய விளம்பர வேடங்கள், கள்ள ஓட்டு—கட்சித் தாவல்—ஆள் கடத்தல்—அதிகார வேட்டைகள், லஞ்ச—ஊழல்—அதிகார முறைகேடுகள், ஆபாச வக்கிர வாழ்க்கை—கிரிமினல் குற்றங்கள் நாடெங்கும் நாற்றமடிக்கின்றன. அரசியல் கட்சிகள் இப்படிச் சீரழிந்து போனால்கூட நாடாளுமன்ற—சட்டமன்ற ஜனநாயகத்தின் புனிதத்துக்கும், மாட்சிமைக்கும் உத்தரவாதம் இருப்பதாக ஒரு மாயத்தோற்றம் மக்களிடையே உருவாக்கப்பட்டிருக்கிறது.

'குடியரசு'த் தலைவர், அவரது பிரதிநிதிகளான மாநில ஆளுநர்கள், நாடாளுமன்ற—சட்டமன்ற அவைத் தலைவர்கள் நிர்வாக இயந்திரத்தின் முக்கிய உறுப்புகளாக செயலகம்—போலீசு போன்றவற்றை ஓட்டுக் கட்சிகளின் அரசியலுக்கு அப்பாற்பட்டவை, பாராபட்சமற்றவை; அரசியல் சட்டத்தின் புனிதத்தையும, மாட்சிமையையும் காப்பவை என்கிற மாயத்தோற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது. எம்ஜிஆர் சாவைத் தொடர்ந்து நடக்கும் தமிழக அரசியல் காட்சிகள் அந்த மாயத்தோற்றத்தைத் தகர்த்து வருகின்றன.

'குடியரசு'த் தலைவர் வெங்கடராமன்—நாட்டின் முதல் குடிமகன், முப்படைகளின் தளபதி, அரசியல் சட்டத்தின் காவலன்—மாநில காங்கிரசில் சொந்தக் கும்பலை வைத்துக் கொண்டுள்ளார். சிவாஜிகணேசனின் காங்கிரசு கும்பலுடன் சேர்ந்து வீரப்பன்—ஜானகி கும்பலுடன் அரசியல் பேரங்கள்நடத்தி அதை ஆட்சியில் ஏற்றினார். ஆளும் கும்பலுக்கும் அமைச்சராயிருந்த ராஜாராமுக்கும் இடைத்தரகராக இருந்து கட்சி தாவத் தூண்டினார். துக்கம் விசாரிக்கவும் அரசு அலுவலாகவும் வந்தவர் மாநில அரசியல் சேற்றில் குதித்துநீச்சலடித்தார். அரசுத் தலைவர் பதவிக்கு எம்ஜிஆர் செய்த சிபாரிக்குநன்றிக்கடன் செலுத்தியிருக்கிறார் போலும்!

மாநில ஆளுநர் குரானா—ஓட்டுப் பொறுக்கிகளின்பாரம்பரியத்தில் வந்து பதவியைப் பிடித்தவரல்ல; அதிகார வர்க்கத்தின் தகுதியைக் கொண்டு ஆளுநரானவர். எம்ஜிஆர் கோடி கோடியாகக் கொள்ளையடித்துக் குவித்து வைத்திருக்கும் கருப்புப் பணத்துக்குச் சோரம் போய் வீரப்பன்—ஜானகி கும்பலுக்கு ஆட்சியைத் தாரை வார்த்தார். மகன் மணவிழாவுக்கு அமைச்சர்கள் அத்தனை பேரும் போய் பரிசளித்தனர்; மனைவி இந்திராவுக்கு விலையுயர்ந்த 'பரிசு'களைத் தருவது எம்ஜிஆரின் வழக்கம்—பிரதமருக்கும் 'பரிசுகள்' பற்றித் தெரியும். ஆளுநர் குரானா விலை போகும் சரக்குத்தான்—மலிவான விலைக்கு அல்ல என்பதையே இவை காட்டுகின்றன.

அவைத் தலைவர்—நடுநிலை வழுவாத, கட்சி சார்பற்ற பதவிஎன்பதால்தான் 'வானளாவிய அதிகாரம்' கொடுத்து வைத்தார்கள். பாசிச பாண்டியன் அவைத் தலைவர் பதவிக்கே இலக்கணமாகத் திகழ்ந்தார். அடாவடியான தீர்ப்புகள் மூலம் கிரிமினல் குற்றவாளிகளை விடுவிப்பது, பத்திரிக்கையாளர்களை வேட்டையாடுவது, எதிர்க்கட்சிகளின் பதவிகளைப் பறிப்பது என்று முன்னேறி சட்டமன்ற ரௌடித் தனங்களுக்குத் தலைமேயேற்றார்.

போலீஸ் கமிஷனர் தேவாரம், வீரப்பன்—ஜானகி கும்பலின் ஏவல் நாயாகவே எதிர்த்தரப்பின்மீது பாய்ந்தார். சவ ஊர்வலத்தில் ஜெயலலிதா தாக்கப்பட்ட வழக்கைப் போலீசுக்காரனுக்கே உரிய முறையில் கையாண்டது, கருணாநிதி சிலை உடைப்புக்கு அரசியல் காரணமில்லையென்று அறிக்கை விட்டது, கட்சி அலுவலகத்தைப் பிடிக்க முயன்ற ஜெயலலிதா கும்பல் மீது பாய்ந்து தாக்கியது, கடைசியாக பாண்டியன உத்திரவை ஏற்று சட்டசபைக்குள் புகுந்து எதிர்க்கட்சியினரை அடித்து விரட்டியது எல்லாமே பாசிசஅரசியல் கட்சியின் குண்டர்படைத் தலைவன் தகுதியை தேவாரம் நிரூபிக்கும் செயல்கள்.

இவர்களை மட்டும் ஓட்டுக்கட்சி அரசியல் விட்டுவைக்கவில்லை. வீரப்பன்—ஜானகி கும்பலின் அரசியல் விபச்சாரத் தரகன் மணியனின் போதனையை ஏற்று முற்றும் துறந்த முனி சங்கராச்சாரி, வெங்கட்ராமன் மூலம் ராஜீவுடன் பேரம் பேசியிருக்கிறார்.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? நாடாளுமன்ற—சட்டசன்ற ஜனநாயகத்தைப் பிடித்துள்ள நோய் அடிமுதல் தலைவரை புரையோடிப் போய் விட்டது. அதிலே தூய்மையான உறுப்பு என்று எதுவுமே கிடையாது! ○

படிப்பகம்

www.padippakam.com

# சட்டமன்ற ரௌடித்தனங்கள்:

ஒவ்வொரு முறை நாடாளுமன்ற—சட்டமன்ற ரௌடித்தனங்கள் நடக்கும்போதும் "வரலாறு கண்டிராத சம்பவங்கள்" என்று ஓட்டுக் கட்சிகளும் பத்திரிக்கைககளும் சித்தரிக்கின்றன. இவர்கள் வலது கையால் வரலாறை எழுதிக் கொண்டு போகும்போதே இடது கையால் அழித்து விடுகிறார்களா வெட்கக் கேடுகள் தெரிந்துவிடக் கூடாதென்று!

தி.வி.கே.எஸ். இளங்கோவன்—தமிழக சட்டமன்ற இந்திரா காங்கிரஸ் உறுப்பினர். சட்டமன்றத்திற்குள்ளாகவே, அவரது கட்சி உறுப்பினர்களாலேயே மிதிபட்டு, உதைபட்டு, சட்டை வேட்டி நார் நாராகக் கிழிபட்டு, உருவிக் கொண்டு இடுப்பில் ஒரே உள்ளாடையுடன் (ஜட்டியுடன்) வெளியே ஓடிவந்தார். அவராவது உள்ளாடையுடன் தப்பித்தேன் பிழைத்தேன் என்று முக்கால் நிர்வாணமாகவாவது ஓடி வந்தார். ஆனால் அன்று நாடாளுமன்ற—சட்டமன்ற ஜனநாயகமோ முழு நிர்வாணமாகவே கிடந்தது.

எம்ஜிஆர் இறந்த நாளிலிருந்தே நாடாளுமன்ற — சட்டமன்ற ஜனநாயகத்தை அங்க அங்கமாக நிர்வாணப்படுத்தி வந்த அவரது வாரிசுகளும்—பங்காளிகளும் முப்பத்து மூன்றாம் நாளன்று முழு நிர்வாணமாக்கிக் காட்டி விட்டார்கள்.

நாடாளுமன்ற— சட்டமன்ற ஜனநாயகத்தின் யோக்கியதை என்னவென்று மீண்டும் ஒருமுறை அதன் நாயகர்கள் நடத்திக்காட்டி விட்டார்கள்.

ஜானகி மந்திரிசபை பதவியேற்றதும் அந்தக் கும்பலின் எம்.எல்.ஏக்கள் சென்னை பிரசிடெண்ட் ஓட்டலில் வைத்துப் பூட்டப்பட்டவுடன், ஜெயலலிதா கும்பலின் எம்.எல்.ஏக்கள் பெங்களூர், பம்பாய், இந்தூர் என்று "தீர்த்தயாத்திரை" புறப்பட்டவுடன் எம்ஜிஆர் கட்சிக்குள் நடந்த வியாபார—பேரங்கள் ஏறக்குறைய இறுதியாகி விட்டன. மற்ற கட்சிகளுடனும் உதிரிகளுடனும் பேரங்கள் தொடங்கிவிட்டன. கவர்னரை விலைபேசி வாங்கிவிட்ட வீரப்பன்—ஜானகி கும்பல், ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு விலைபேசியது. சிவாஜி, வெங்கட்ராமன் ஆகிய காங்கிரசு கும்பல்களை பேரம் பேசி முடித்தது. ஜனதா, பார்வர்டுபிளாக் உறுப்பினர்களையும் வாங்கியது. பாசிச ராஜீவின் ஆதரவு பெற்றிருந்த ஜெயலலிதா கும்பலும் வியாபாரத்தில் இறங்கி பார்வர்டு பிளாக், குடியரசுக்கட்சி உறுப்பினர்களை வாங்கியது. ஜெயலலிதா டெல்லியிலிருந்து திரும்பியதும் எல்லாம் இறுதி முடிவாகிவிட்டது. ஆட்சி கவிழும் என்ற பீதி இருந்



தாலும், 12 காங்கிரசு எம்.எல்.ஏக்களை வளைத்துப் போடும் இறுதி முயற்சியில் இறங்கிய வீரப்பன்—ஜானகி கும்பல் பாதிக் கிணறுதான் தாண்ட முடிந்தது. 5 பேரைத்தான் விலைக்கு வாங்க முடிந்தது. சட்டமன்றம் கூடினால் என்ன நடக்குமென்று எல்லா ஓட்டுக் கட்சிகளுக்கும் ஏற்கனவே தெரிந்து விட்டது. இல்லையென்றால் இவ்வளவு போலீசாரும், குண்டர்களும் தயாராகக் குவிக்கப்பட்டிருப்பார்களா?

பொது நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தாமதமாக வரும் இந்த ஓட்டுப் பொறுக்கிகள் ஜனவரி 28ந் தேதி ஆபாசக் கூத்தை அரங்கேற்றுவதற்காக அரைமணி நேரம் முன்னதாகவே சட்டமன்றம் வந்துவிட்டிருந்தார்கள். "எதிர்வரும் லாபம் கருதி கைமுதலையும் இழப்பவன் புத்திசாலி அல்ல" என்று பொருள்படும் திருக்குறளைச் சொல்லி எல்லோரையும் குதூகலப்படுத்திவிட்டு உட்கார்ந்தார் பாசிசக் கோமாளி சபாநாயகர் பாண்டியன். "ஐந்து காங்கிரசு உறுப்பினர்கள் ராஜினாமா செய்து விட்டதாகத் தொலைபேசியில் கூறினர். அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். 12மணிக்கு சபை கூடும்" என்று அறிவித்துவிட்டுப் பாண்டியன் அறைக்குப் போய்விட்டார். காந்தி, நேரு, இந்திரா, ராஜீவ் வழிவந்த காங்கிரசுக்காரர்கள் கொதித்தெழுந்தனர். "வெட்கம்! வெட்கம்! கோழை போல் ஓடிப்போன பாண்டியன் ஒழிக!" என்று கத்தி கூச்சல் போட்டனர். "கண்ணியம் மிகு அக்கா யசோதா"தான் காந்திய அறப்போரைத் துவங்கி வைத்தார்.

ஐந்தாவது நிமிடத்தில் ராஜினாமா செய்த சிவாஜி கும்பலின் ஐந்து காங்கிரசு உறுப்பினர்கள் நுழைந்தார்கள். ஜானகியின் "அடுப்பங்கரை அமைச்சர்" சுலோச்சனா சம்பத் மகன் இளங்கோவன் சோரம் போன அந்தக் கும்பலுக்குத் தலைமை தாங்கி வந்தார். உடனேகாங்கிரசு எம்எல்ஏ வேணுகோபால் பாய்ந்துபோய் இளங்கோவன்சட்டையைப் பிடித்து தூக்கி குலுக்கி கீழே தள்ளினார். இளங்கோவனையும் ராஜினமா செய்த செல்லப்பா, சொர்ணலிங்கத்தையும் மூப்பனார் கும்பலின் எம்எல்ஏக்கள் சூழ்ந்து கொண்டு தாக்கினர். தப்பி ஓடிய செல்லப்பாவை சிலர் விரட்டினர். மேசை மீது ஏறி குதித்து ஓடிய சொர்ணலிங்கத்தை வளைத்துப் போட "அக்கா யசோதா" முயன்று தோற்றுப் போனார். சட்டை

## நாடாளுமன்ற-சட்டமன்ற ஜனநாயகம் நிர்வாணமானது!

வேட்டி கிழிந்து கீழே விழ ஜட்டியுடன் இளங்கோவன் "எவனும் கிட்டே நெருங்காதே" என்று எச்சரித்துக் கொண்டே ஓடித் தப்பித்தார்.

ராஜினாமா செய்த வெங்கடராமனை மூப்பனார் எம்எல்ஏக்கள் பிடித்து இருந்தனர். அவர் கை எடுத்துக் கும்பிட்டுக்கொண்டே "என்னையும் அசிங்கப்படுத்தாதீர்கள்" என்று கெஞ்சியபடி ஓடினார். ஐந்தாவது எம்எல்ஏயும் தஞ்சை சிவாஜி ரசிகருமான துரை கிருஷ்ணமூர்த்தியை மூப்பனார் எம்எல்ஏக்கள் பிடித்து வைத்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டனர். அவரால் திமிர முடியவில்லை, வெளியிலிருந்து பாய்ந்த செல்லப்பா எதிர்ப்பட்டவர் கைகளையெல்லாம் தட்டிவிட்டு துரைகிருஷ்ணமூர்த்தியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார். வால்பாறை எம்எல்ஏ தங்கவேலு வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு மேசை மேசையாகத் தாவிக் குதித்துபோய் மடக்கினார். மூப்பனார் எம்எல்ஏக்கள் சூழ்ந்து கொண்டனர். கொஞ்சமும் கூச்சம் வெட்கமின்றி ஆபாசமான வசவுகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

சிவாஜி ரசிகரின் தாடையைத் தடவி கெஞ்சி இழுத்து வந்து இருத்திக் கொண்டார்கள் மூப்பனார் எம்எல்ஏக்கள். அப்போது சொர்ணலிங்கத்துடன் சபாநாயகரின் காவலர்கள் உள்ளே வந்து துரை கிருஷ்ணமூர்த்தியைக் கூப்பிட்டார்கள். "வெளியே போடா—தொப்பியைக் கழட்டி விடுவோம்" என்று ஆத்திரமாகக் கூச்சல் போட்டார்கள். காங்கிரசாரின் இந்த "அறப்போரை" பல கணியிலிருந்து மத்திய அமைச்சர், மாநிலத் தலைவர், எம்பிக்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். தப்பியோடிய நாலு எம்எல்ஏக்களிடம் பக்கத்து அறையிலிருந்த ஜானகியும், பாண்டியனும், அமைச்சர்களும் முறைப்படி ராஜினாமா கடிதம் எழுதி வாங்கினர்.

அடுத்த இரண்டு மணி நேரமும் திமுக, போலிக் கம்யூனிஸ்டுகள், ஜனதாவுடன் தீவிரபேரம் பேசப் புறப்பட்டனர் வீரப்பன்—ஜானகி கும்பல். கருணாநிதியின் வீட்டுக்கு இரண்டுமுறை காவடி தூக்கிப் போய் காலில் விழாத குறையாகக் கெஞ்சினர். "திராவிடப் பாரம்பரிய ஆட்சி நீடிக்க உதவுமாறு" புது ஆழ்வார் வீரப்பன் கும்பல் மன்றாடியது. அடுத்த தேர்தலையும், பதவியையும் கனவு கண்டு கொண்டிருக்கும் கருணாநிதி மசியவில்லை. நாக்கில் எச்சில் ஊற இரண்டுமுறை தொலைபேசியில் தொடர்பு கொண்டார் நாஞ்சில் மனோகரன். சந்தேகம் வலுத்த கருணாநிதி எழுத்து மூலமாக மனோகரனுக்கு உத்திரவு போட்டார்.

"பாண்டியனே சரணம், ஒரே கதி" என்று போர்களத்துக்கு அனுப்பி வைத்தது வீரப்பன்—ஜானகி கும்பல். மீண்டும் குறள் படித்துக் கூட்டத்தைத் தொடங்கிய பாண்டியன் தனது "வானளாவிய அதிகாரத்தை"ப் பிரயோகித்தார். கட்சித் தாவல் தடைச் சட்டப்படி ஜெயலலிதா கும்பலைச் சேர்ந்த 6 முன்னாள் மந்திரிகளின் எம்எல்ஏ பதவி நீக்கப்பட்டதாகவும் மீண்டும் 2 மணிக்குச் சபை கூடும் என்றும் அறிவித்துவிட்டு வெளியேறினர். "வெட்கம்! வெட்கம்!" "சர்வாதிகாரன் பாண்டியன் ஒழிக!" என்று ஜெயலலிதா— மூப்பனார் எம்எல்ஏக்கள் கூச்சல் போட்டனர். சபாநாயகர் ஆசனத்தை நோக்கி கட்டைகளையும், கண்ணாடி குண்டுகளையும் வீசினர். உடனே பெரிய கலகம் மூண்டது.

ஜெயலலிதாவின் படைத் தளபதியும் முன்னாள் மந்திரியுமான சாத்தூர் ராமச்சந்திரன் மைக்குகளை உடைத்தெடுத்தார். பேப்பர் வெயிட்டுகளைத் தூக்கி வெளியே எறிந்தார். காங்கிரசாரும் இதைச் செய்தனர். வெளியேறிக் கொண்டிருந்த வீரப்பன்—ஜானகி எம்எல்ஏக்களை நோக்கி செருப்புக்களை வீசினர். மூப்பனார் எம்எல்ஏ தங்கவேலு மைக்கை உருவிக் கொண்டு மேஜைமீது தாவித்தாவி வெளியே ஓடி வந்தார். அவரைத் தடுத்துநிறுத்தமுற்பட்ட சபைக் காவலர்களையும் மைக்கைக் கொண்டு தாக்கித் துரத்தினார்.

ஜெயலலிதாவின் மற்றொரு படைத் தலைவர் சேடப்பட்டி முத்தையாவை சபாநாயகர் ஆசனத்தில் அமரும்படி பண்ருட்டியும் திருநாவுக்கரசும்கூறினர். சபாநாயகர் ஆசனத்தைநோக்கிமுத்தையா பாய்ந்தார். வீரப்பன்—ஜானகி கும்பலின் குண்டர்களான சைதை துரைசாமியும், கே.பி.ராமலிங்கமும் சபாநாயகர் ஆசனத்தைச் சூழ்ந்து கொண்டு முத்தையாவைத் தடுத்தனர். அவ்விருவரையும் இழுத்துப் போட்டு மாறிமாறித் தாக்கினார்கள் சாத்தூர் ராமச்சந்திரனும் துரை ராமசாமியும், செங்கோட்டையனும். கீழே விழுந்த ராமலிங்கத்தை மிதித்தனர். தானாடாவிட்டாலும் தன் சதை ஆடும் ரத்தத்தின் ரத்தமான பாசமல்லவா? பாய்ந்துபோய் துரை ராமசாமியையும் செங்கோட்டையனையும் தாக்கினார் கிணத்துக்கடவு ரௌடியும் வீரப்பன்—ஜானகி அடியாளுமான நெகமும் கந்தசாமி; அவரது சகபாடிகள் செருப்புக்களை வீசினர்.

பிரபல ரௌடி எம்எல்ஏ தாமரைக்கனி, துரை கோவிந்தராஜனுடன் வீரப்பன்—ஜானகி ஆட்கள் களத்தில் நேரடியாக இறங்கினர். மைக்கைப்பிடுங்கிக்கொண்டு ஜெயலலிதா கும்பலைச் சேர்ந்த முன்னாள் மந்திரிகள் பண்ருட்டி, நெடுஞ்செழியன், திருநாவுக்கரசு, சாத்தூர் ராமச்சந்திரனைத் தாக்கினர். வாளைச் சுழற்றுவது போல மைக்கைச் சுழற்றிச் சுழற்றி அடித்தார்கள். ஜெயலலிதா ஆட்களும் நாற்காலி, மைக்குகளைத் தூக்கி ஜானகி மந்திரிகள் உட்பட எம்எல்ஏக்களைத் தாக்கினர். ஒருவரை ஒருவர் செருப்பால் தாக்கிக்கொண்டனர்; காலால் எட்டி உதைத்தார்கள். போலீசு உள்ளே நுழைந்து எல்லோரையும் வெளியேறும்படி உத்திரவு போட்டது. நிலைமை கை மீறிப்போகவே வீரப்பன்—ஜானகி எம்எல்ஏக்கள் வெளியேறினர்.

இதுதான் சமயமென்று மூப்பனார்—ஜெயலலிதா எம்எல்ஏக்கள் போட்டி சட்டமன்றக் கூட்டம் நடத்தினர். சிவராமன் என்பவரை சபாநாயகராக அறிவித்தனர். பாண்டியனை நீக்குவதாகவும், ஜானகி அமைச்சரவைமீது நம்பிக்கை இல்லாத்தீர்மானமும் நிறைவேறியதாக அறிவித்தனர். இந்தக் கூத்தை ஒரு ஓரமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த திமுக, போலிக்கம்யூனிஸ்டுகள், ஜனதா, முஸ்லீம் லீக், இந்துமுன்னணிஉறுப்பினர்களும் போட்டிக் கூட்டத்தை ஏற்பதாக அவர்களே அறிவித்தனர். கவர்னர் மாளிகைக்குப்

*சட்டசபை அடிதடியில் தலையில் பலத்த காயமடைந்த வாசுதேவ நல்லூர் செல்வராஜ் கையில் பலத்த காயமடைந்தார் டி. யசோதா*



படிப்பகம்

www.padippakam.com

படையெடுத்துப் போய் முறையிட்டனர். அவர் எழுதிவாங்கிக் கொண்டார்; இதிலே கொஞ்சமும் வெட்கமின்றி போலிக்கம்யூனிஸ்டுகளும் கலந்து கொண்டனர்.

மூன்றாவது முறையாகத் தவறாது திருக்குறள்பாடி மூன்று மணிக்கு சபையைத் தொடங்கினார் பாண்டியன். ஜெயலலிதா—மூப்பனார் ஆட்கள் உள்ளே வந்தனர். அவர்களை மறிப்பதற்கு சபைக் காவலர்கள் முயன்றனர். “டேய் கையைத் தொட்டால் தொலைத்து விடுவேன்” என்று சாத்தூர் ராமச்சந்திரன் எச்சரிக்க உள்ளே போனார்கள். ஆசனத்தில்பாண்டியனோடு போய் ஒட்டி உட்கார்ந்தார் போட்டி சபாநாயகர் சிவராமன். ஒருவரை ஒருவர் பிடித்துத்தள்ள, பாண்டியன் மடியில் உட்கார்ந்தார் சிவராமன். அவரைப் பாண்டியன் தள்ளினார். “டேய் பாண்டியா. அதிலே உட்காராதே!” என்று கூச்சல்போட்டுக்கொண்டே மூப்பனார் எம்எல்ஏக்கள் பாய்ந்தனர். சிவராமன் எழுந்து நாற்காலியைத் தூக்கி பாண்டியனை ஓங்கி அடிக்க முயன்றார்; சபாநாயகரின் பாது காவலர் மீதுதான் அடி விழுந்தது. பிறகு செருப்புகளையும், மரக்கட்டைகளையும் வீசினர்.

சபாநாயகர் ஆசனமும் மேசையும் நொறுங்கின. பாய்ந்து வந்த துரைசாமி, மூப்பனார் எம்எல்ஏ பாப்பா சுப்பிரமணியத்தை பளாரென்று அறைந்தார். அவர் எதிர்ப் பக்கம் போய் விழுந்தார். வீரப்பன்—ஜானகி எம்எல்ஏக்கள் நாற்காலிகளைத் தூக்கி விசிறியடித்தனர். பி என்.ராமச்சந்திரன் மேசைமேல் ஏறி இடுப்புவாரை (பெல்ட்) கழற்றி சுழற்றி, சுழற்றி காங்கிரசாரை வளைத்து வளைத்து அடித்தார். அவர்கள் சிதறி ஓடினார்கள். இரண்டு தரப்பினரும் கட்டிப் புரண்டு சண்டை போட்டார்கள். நெஞ்சிலும், முகத்திலும் குத்தினார்கள்.

இதற்குள் வெளியிலிருந்து பத்திரிக்கையாளர் காலரி வழியாக ரௌடிகள் புகுந்தார்கள். காவலர்கள் கதவை மூடியும்கூட உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்தனர். சைக்கிள் சையின், சோடாபாட்டில்கள், கற்கள் சகிதமாக வந்து எம்எல்ஏக்களைத் தாக்கினர். சாத்தூர் ராமச்சந்திரன், திண்டிவனம் ராமமூர்த்தி தலைமையில் ஜெயலலிதா கும்பலும், ஜேப்பியார் பி.என்.ராமச்சந்திரன் தலைமையில் வீரப்பன்—ஜானகி கும்பலும் வெள்ளை உடையிலும், காவலர் சீருடையிலும் லாரிகளில் அடியாட்களைத் தயாராகக் கொண்டு வந்திருந்தனர்.

அடி-தடி கலவரம் பயங்கரமானது; மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சட்டசபை யுத்தகளமானது. தேவாரம் தலைமையில் இரும்புத் [illegible] ரௌடிகளும் போரில் குதித்தனர். மூப்பனார்—ஜெயலலிதா எம்எல்ஏக்கள் அடித்து நொறுக்கப்பட்டனர். பலருக்கு ரத்த காயம்; ரத்தம் கொட்டியபடி வெளியே ஓடினார்கள். குறிப்பாக எதிர்த் தரப்பினர் அனைவரையும் அடித்து விரட்டிய பிறகு நான்காவது முறையாக திருக்குறள்பாடிமீண்டும் கூட்டத்தை ஆரம்பித்தார் பாண்டியன். எட்டுத் திமுகவினர் உள்ளே வந்தனர். திராவிட பாரம்பரியத்தைச் சொல்லி ஜானகிமீது நம்பிக்கைத்தீர்மானம் கொண்டு வந்தார் வீரப்பன். 99பேர் ஆதரிக்க எட்டு திமுக எதிர்க்க; முஸ்லீம் லீக், ஜனதா நடுநிலைவகிக்க நம்பிக்கை தீர்மானம் நிறைவேறியதாக அறிவித்தனர். சபையிலிருந்த மனோகரன், ரகுமான்கான் ஆகியோர்மீது திராவிட பாசத்தைக் கொட்டி காங்கிரசாரின் துரோகத்தனம் பற்றி ஒப்பாரி பாடி முடித்தார், பாசிச பாண்டியன.

இதற்கிடையில் வீரப்பன்—ஜானகி கும்பல் ரௌடிகள் மீண்டும் கோட்டைக்குள் வந்தனர். சட்டசபையைச் சுற்றி நின்றிருந்தவர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். தடிகளும், கம்புகளும், சைக்கிள்செயின்களும் கொண்டு தாக்கினர். சோடாப்பாட்டில்கள் வீசினர். மத்திய மந்திரி அருணாச்சலம், புதுச்சேரி முதல்வர் பரூக், பழனியாண்டி ஆகியோரைக் கண்டதும் தாக்க ஓடினர். அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர் அறைக்குள் ஓடி ஒளிந்தனர்.

ஜனவரி 28ந்தேதி சட்டமன்றப் போரை முடித்துக்கொண்ட பின், இந்த ஓட்டுப்பொறுக்கிக் கட்சிகள் வெளியிலே தமது சாகச நாடகங்களைத் துவங்கிவிட்டன. வீரப்பன்—ஜானகி கும்பலும், மூப்பனார்—ஜெயலலிதா கும்பலும் நடந்துவிட்ட சம்பவங்களுக்காக ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொள்கிறார்கள். காங்கிரசின் துரோகத்தனம் குறித்து அவர்களும், ரௌடிகள்--போலீசைவிட்டுத் தாக்கிய பாண்டியனின் பாசிசம் குறித்து இவர்களும் புகார் கூறுகின்றனர். காங்கிரசின் ஆதரவின்றி பதவி இழக்கும் ஆத்திரத்தில் வீரப்பன்—ஜானகி கும்பலும், ஒன்றுபட்ட எம்ஜிஆர் கட்சிக்கே ஆதரவு என்று கூறியே பிளவுபட்ட, பேரம்பேசி விலைக்கு வாங்கியே பழக்கப்பட்ட தனது உறுப்பினர்களே விலைபோன ஆத்திரத்தில் காங்கிரசும்—மூப்பனார் கும்பலும், பதவியைப் பிடிக்கும் அவசர—ஆத்திரத்தில் ஜெயலலிதா கும்பலும் சட்டமன்றத்தில் வெறியாட்டம் போட்டன. இந்தச் சமயத்திலாவது இழந்துவிட்ட நாற்காலியைப் பிடித்துவிடமாட்டோமா என்று நாக்கில் நீருற வேடிக்கை பார்க்கிற கருணாநிதி கட்சி, அரசியல் நாகரீகம் குறித்து



கையிலும் காலிலும் அடிபட்ட ஜானகி - வீரப்பன் கும்பல் எம்எல்ஏக்கள்

பிரசங்கம் செய்கிறது; போலிக்கம்யூனிஸ்டுகளும் அவருடன் கூட்டுப் பாடல் பாடுகின்றனர்.

ஆனால் நடந்துமுடிந்த சட்டமன்ற ரௌடித்தனம் குறித்து ஒரு குறிப்பிட்ட பொய்யை மக்களிடம் பரப்பி நம்பவைப்பதில் இந்த ஓட்டுப்பொறுக்கிக் கட்சிகள் அத்தனையும் ஒன்றுபடுகின்றன. எல்லா முதலாளித்துவப் பத்திரிக்கைகளும் இதே பொய்யைப் பிரச்சாரம் செய்கின்றன. “ஜனவரி 28ந்தேதி தமிழக சட்டமன்றத்தில் நடந்தவை முன்னெப்போதும் நாடாளுமன்ற—சட்டமன்ற வரலாறுகாணாத சம்பவங்கள்.”—என்கிற பொய்தான் அது! நாடாளுமன்ற—சட்டமன்ற ஜனநாயகத்தின் மீது மக்கள்முற்றாக நம்பிக்கை இழந்துபோய்விடக் கூடாது என்பதற்காகப் பரப்பி விடப்படும் பொய்தான் அது!

“இது ஏதோ ஒருசில சுயநல நபர்கள், கோஷ்டிகள், கட்சிகளின் அநாகரிகச் செயல்; மற்றபடி நாடாளுமன்ற ஜனநாயகம் சரியானதே” என்று நம்பிக்கையூட்ட முயலும் பொய்தான் அது! ‘‘தகுதியற்றவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கும் இதில் பங்குண்டு” என்று மக்கள் மீதே திரும்பப் பழிபோடும் பொய்தான் அது!

எது முன்னெப்போதும் வரலாறு கண்டிராத அநாகரிகச் செயல்? இதற்குமுன் அடிதடிரகளை, செறுப்பு, நாற்காலி, மைக் வீச்சு, ரத்தக் காயம், வேட்டி அவிழ்ப்பு, கொலை மிரட்டல்கள், ஆபாச வசவுகள் எல்லாமே தமிழக



படிப்பகம்

சட்டமன்றத்தில் நடந்திருக்கின்றன. சபாநாயகர் மதியழகனைச் செருப்பால் அடித்து அவமானப்படுத்தி துரத்தியிருக்கின்றனர் கருணாநிதி கட்சியினர். தாமரைக்கனி மேசைமீது தாவிக் குதித்தோடி துரைமுருகன் கன்னத்தில் அறைந்திருக்கிறார். சபையில் வேட்டியை அவிழ்த்து ஆபாசமாக வசனம்பாடியிருக்கிறார் முன்னாள் துணை மந்திரி ராதா. "டேய்! மனோகரா, கொன்னுபுடுவேன்!" என்று நேரடியாக மிரட்டியிருக்கிறார் சபாநாயகர் பாண்டியன்.

● "தமிழ்நாட்டையே வெட்கித் தலை குனிய வைத்துவிட்டனர்" என்று ஜெயலலிதா-காங்கிரசு கும்பலும், "நாகரிக உலகம் வெட்கித் தலைகுனியும் முறையிலான வன்முறைத் தாக்குதல்" என்று போலிக் கம்யூனிஸ்டுகளும் திமுகவும்ஒப்பாரி வைக்கின்றனர். இரண்டு தரப்பினரும் ரௌடிகும்பலை வரவைத்துத் தாக்கினர்; அது மட்டுமல்ல, தமிழகத்தில் மட்டும்தான் சட்டமன்ற ரௌடித்தனம் நடந்துள்ளதா? சட்டமன்ற ரௌடித்தனம் நடக்காத சட்டமன்றங்களே இல்லையென்று சொல்லலாம். இரண்டு மாதங்களுக்கு முன்புதான் கேரள சட்டமன்றத்தில் இரண்டு 'மார்க்சிஸ்டு' எம்எல்ஏக்கள் எதிர்க்கட்சி உறுப்பினர் ராகவனை இழுத்துப் போட்டுத் தாக்கினர். மேற்கு வங்க சட்டமன்றத்துக்குள் போலீசை அழைத்து தடியபடி நடத்தியுள்ளது போலிக்கம்யூனிஸ்டு ஆட்சி.

● சட்டமன்றங்களில் மட்டுமல்ல, இவர்களின் தலைவர்கள் பங்கேற்கும் [illegible] ரவுடித்தனம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு முறை லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளிலிருந்தும் தப்பிக்க முயலும்போதும் இந்திரா, ராஜீவ் இருவருமே தூண்டிவிட்டு ராஜீவே பங்கேற்க ரௌடித்தனங்கள் நடந்துள்ளன. பாண்டிச்சேரி லைசென்சு ஊழல், குவா எண்ணெய் பேர ஊழல், அந்துலே அறக்கட்டளை ஊழல், கடைசியாக ஃபேர் பாக்ஸ், போபார்ஸ் விவகாரங்களின்போது காங்கிரசார் ரௌடித்தனம் செய்தனர். நாடாளுமன்ற ரௌடித்தனம் உச்ச கட்டத்தை அடைந்து விடுவதற்கு முன்பாகத்தான் அவசர நிலைப் பிரகடனம் வந்தது.

● போட்டி சட்டமன்றக் கூட்டங்கள் நடத்துவதும் புதிதல்ல. 1972ல் சபாநாயகர் மதியழகனும், துணைச் சபாநாயகர் சீனிவாசனும் போட்டிக் கூட்டங்கள் நடத்தி ஒன்று மற்றதன் நடவடிக்கைகளை ரத்து செய்து கருணாநிதி—எம்ஜிஆர் கட்சிகள் ரௌடித்தனம் போட்டன. சபாநாயகர்களை உருவாக்கும் நெருக்கடியால் அராஜகம் விளைவதும் புதிதல்ல. 1967ல் அஜாய் முகர்ஜி தலைமையிலான மேற்கு வங்க கூட்டணி அரசைக் கவிழ்த்துவிட்டு பி. சி. கோஷ் தலைமையில் காங்கிரசு பினாமி மந்திரி சபை நியமிக்கப்பட்டது. சபாநாயகர் பிஜோய்குமார் பேனர்ஜி கவர்னரின் கட்டளைக்கு மறுத்து சபையைக் காலவரையின்றி ஒத்திப் போட்டார். 1968ல் மீண்டும் சட்டசபைக் கூட்டுக் கூட்டத்தைக் கவர்னர் கூட்டியபோது கவர்னரையே சபைக்குள் நுழையவிடவில்லை. புறக்கடை வழியே நுழைந்த கவர்னரை சபாநாயகர் மேடையிலிருந்து முழுவதுமாய் பேசவிடாமல் ஆர்ப்பாட்டம் செய்து விரட்டினர் போலிக் கம்யூனிஸ்டுகள்.

1984ல் ஆந்திராவில் முஸ்லீம் எம்.எல்.ஏ. ஒளவசியை சபாநாயகராக வைத்து எதிர்த் தரப்பினரைத் தாக்கி இந்திரா—ராஜீவ் கும்பல் ரௌடித்தனம் செய்தது.

● "வானளாவிய அதிகாரத்தை"த் தனது அராஜகத்துக்குச் சபாநாயகர்கள் பயன்படுத்துவதும் புதிதல்ல. பாசிச பாண்டியனாவது எந்த விதியின் கீழ் தனது ரௌடித்தனம் வருகிறது என்று சொல்லுகிறார். டெல்லி சபாநாயகர் பலராம் ஜாகர் "எனக்கு அதிகாரம் இருக்கிறது. நான் சொன்னால் சொன்னதுதான்!" என்று வெறுமனே திடலடியாக பாசிச முறையில் சபையை நடத்துகிறார். கட்சி தாவல் தடைச் சட்டத்தை இதற்கு முன் பிரயோகித்து பாண்டியன் அதிமுகவினரை நீக்கியது, பஞ்சாபில் அகாலிகளை நீக்கியது, காஷ்மீரில் பரூக் கட்சியினரை நீக்கியது எல்லாமே குறுகிய கட்சிச் சுயநலன் பதவி வெறிக்காக நடந்தவைதான்.

● அரசியல் பேரங்கள் நடத்துவதும், கட்சி மாறுவதும், சிறுபான்மை ஆட்சியை நிறுவி ஆளுவதும் கூட புதிதல்ல. இரு கைவிரல் எண்ணிக்கைகூட இல்லாதபட்டம்தாணு அரசு கேரளாவிலும், பி. சி. கோஷ் அரசு மேற்கு வங்காளத்திலும், ஜி. எம். ஷா அரசு காஷ்மீரிலும் திணிக்கப்பட்டன. கர்நாடகாவில் ஆரம்ப கால ஹெக்டே ஆட்சியும் அறுதிப் பெரும்பான்மை கொண்டிருக்கவில்லை.

வீரப்பன்—ஜானகி கும்பலின் சட்டமன்ற ரௌடித்தனம், பாண்டியனின் பாசிச அராஜக நடவடிக்கைகளை எந்த விதத்திலும் நியாயப்படுத்துவதற்காக இவற்றை வரிசைப்படுத்தவில்லை. "ஜனநாயக மரபு", "அரசியல் நாகரிகம்", "அகிம்சை—நியாயம்" இவை அனைத்தும் பற்றி பல்வேறு ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளும் இப்போது ஓலமிடுவது எல்லாம் மக்களை ஏய்ப்பதற்கானவை; நாடாளுமன்ற—சட்டமன்ற ஜனநாயகம் என்பது இவர்கள் வாயடிப்பதுபோல புனிதமானதாகக் கருதி இவர்களே மதித்துக் கொண்டவை அல்ல. வசதிக்காக தேவையானபோது அவரவர் போடும் ஓலம்தான். நாடாளுமன்ற—சட்டமன்ற ஜனநாயகத்தின் ஓட்டாண்டித்தனத்தை மக்கள் புரிந்துகொள்ளக்கூடாது, அதன்மீது நம்பிக்கையிழந்து விடக்கூடாது என்பதற்காக அவர்கள் போடும் கூட்டுக் கூப்பாடுதான்.

சட்டமன்றத்துக்குள் ரௌடிகளை ஏவி எம்.எல்.ஏக்களைத் தாக்குவது புதிய, நாடாளுமன்ற சட்டமன்ற ஜனநாயகத்தின் தவிர்க்கமுடியாத அடுத்த கட்டம். ஆனால் ஏற்கனவே நாடாளுமன்ற—சட்டமன்ற—உள்ளூராட்சித் தேர்தல்கள் எப்படி நடக்கின்றன? கள்ள ஓட்டு, ரௌடித்தனம், கறுப்புப் பணம், கள்ளச் சாராயம் இவை இன்றி நடக்கின்றனவா? எம்.எல். ஏக்களே யார்? கொலை, கொள்ளை, கடத்தல் கற்பழிப்பு, லஞ்ச ஊழல் அதிகார முறைகேடு ஆகிய கிரிமினல் குற்றங்கள் செய்து கோடியாக சேர்க்கும் ரௌடிகள்தானே! போலீஸ் பதிவேடுகளில் பெயருள்ள இப்படிப்பட்ட கிரிமினல் குற்றவாளிகள் அரசியலில் அதிகமாக நுழைவதும், எம்.எல்.ஏக்கள் கிரிமினல் குற்றங்கள் செய்வதும் அதிகரித்து வருவதாகத்தானே ஆதாரங்கள் காட்டுகின்றன. இதுவரை தாமே உள்ளேயும் வெளியேயும் ரௌடித்தனங்கள் செய்து வந்தவர்கள் சட்டமன்றத்திலேயே கைவரிசை காட்டுவதும் அதற்கு வெளியிலிருந்து தமது கூட்டாளிகளைக் கூலிக்கு அழைத்து வருவதும் ஆச்சரியமில்லை. அதிர்ச்சிக்குரியதும் இல்லை.

✱ ஆர். கே

சட்டசபைக்குள் இரும்புக்கம்பி பறந்து வந்து எம்.எல்.ஏ பெரியசாமியின் மண்டை உடைந்தது





www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# 5 மாநிலங்களில் இராணுவ ஆட்சி

## தேசிய சுயநிர்ணய உரிமைப்போர் முற்றுகிறது

இந்தியா தனது 39வது 'குடியரசு' தினத்தை பீரங்கிகள் முழங்க கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது, வடகிழக்கிந்தியாவில் தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிவரும் மக்களின்மீது இந்திய ராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுகள் சீறிப் பாய்ந்துகொண்டிருந்தன. வலுக்கட்டாயமாக இந்தியக் குடியரசில் இணைக்கப்பட்ட வடகிழக்கிந்திய தேசிய இனமக்கள் தங்கள் தேசியசுயநிர்ணயஉரிமைக்கான போரை தீவிரப்படுத்தி வருகிறார்கள்.

சலுகைகளை வாரியிறைத்தும் துரோகிகளை உருவாக்கியும் ராஜீவ் போட்ட 'வரலாற்றுச் சிறப்புமிக்க' ஒப்பந்தங்கள் கழிப்பறை காகிதமாகிவிட்டது. தேசிய ஒருமைப்பாடு கந்தல் துணியாகிவிட்டது. மூன்று தலைமுறையாக நீடித்து வரும் வடகிழக்கிந்திய தேசிய இனமக்களின் போராட்டத்தை ஒடுக்க ராணுவம் நிரந்தரமாக தங்கிவிட்டது. கிட்டத்தட்ட ராணுவ ஆட்சியே அனைத்து மாநிலங்களிலும் நீடிக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை பொம்மையாக்கிவிட்டு ராணுவமே சிவில் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டு ஆட்டிப் படைக்கிறது. திரிபுராவில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு தீவிரவாதிகளால் இடையூறு நேராதிருக்க அது 'கலவரப் பகுதியாக' அறிவிக்கப்பட்டு ராணுவ கும்பலின் களிவெறியாட்ட கலவரப்பகுதியாக மாற்றப்பட்டுள்ளது.

மறுபுறம், வடகிழக்கிந்திய புரட்சியாளர்கள் தங்களுக்குள் ஐக்கிய முன்னணி கட்டியமைத்த ஒன்றுபட்டு போராடி வருகிறார்கள். அனைத்து ஆயுதப்போராட்ட அமைப்புகளும் ஐக்கியப் பட்டிருப்பதானது, மொத்தத்தில் ஒரு பொது எழுச்சிக்கான தயாரிப்புகளை காட்டுகிறது என்று முதலாளித்துவ பத்திரிக்கைகளே எழுதும் அளவுக்கு புரட்சித் தீ பற்றிப் பரவுகிறது

ஆயுதமேந்தி களத்தில் நிற்கும், தேசிய சுயநிர்ணய உரிமைப் போரில் முன்னேறிவரும் தலைமறைவு அமைப்புகள், மணிப்பூர்—திரிபுரா—நாகா—அஸ்ஸாம் கூட்டமைப்பு MTNAC என்ற பெயரில் ஐக்கிய முன்னணியைகட்டியமைத்துள்ளார்கள். இதில் நாகா தேசிய சோசலிஸ்டுக் கவுன்சில் NSCN என்கிற அமைப்பு முக்கியமானதாகவும் சக்தி வாய்ந்ததாகவும் திகழ்கிறது. இதுதவிர நாகா விடுதலைப் போராட்ட தலைவர்பிஜோ நிறுவிய நாகா ஐக்கிய அரசாங்கம் NFG, ஐக்கிய தேசிய விடுதலைமுன்னணி UNLF, மணிப்பூரின் மக்கள் விடுதலைப்படை PLA, காங்கிலிபாக் மக்கள் புரட்சிகரகட்சி PREPAK, மிஜோ தேசியப்படை MNA அசாம் ஐக்கிய விடுதலைமுன்னணி ULFA ஆகிய அமைப்புகள் ஐக்கியப்பட்டு போராடுகின்றன. ஆயுதப் போராட்ட அமைப்புகளின் ஐக்கியம் புதிய பரிமாணத்தை அடைந்திருப்பதோடு ஆளும் வர்க்கங்களுக்குக் கிலியூட்டுவதாக உள்ளது.

ஐந்து மாநிலங்களில் செயல்படும் ஐக்கிய முன்னணியில்முக்கிய பங்காற்றும் நாகா தேசிய சோசலிஸ்டுக் கவுன்சிலில், நீண்ட காலமாகவே பர்மாவில் தேசிய சுயநிர்ணய உரிமைக்கும் மக்களின் விடுதலைக்கும் உறுதியாகபோராடிவரும் கச்சின் சுதந்திரப் படையுடனும் KIA, பர்மீய கம்யூனிஸ்ட் கட்சியுடனும் BCP தொடர்பு கொண்டுள்ளது. மக்கள் யுத்தப் பாதையிலான கொரில்லா யுத்தத்தில் அனுபவமிக்க பர்மீய புரட்சியாளர்கள் நாகா கொரில்லாக்களுக்கு ஆதரவும், ஆயுதப் பயிற்சியும் அளித்து வருகின்றனர். இந்த ஆண்டின் துவக்கத்தில் குறைந்தபட்சம் 400 கொரில்லாக்கள்கச்சின் சுதந்திரப்படையிடம் பயிற்சி பெற்று திரும்பியுள்ளார்கள்.

"நாகா- மிஜோ- மணிப்பூர் கொரில்லாக்கள் பர்மா தீவிரவாதிகளிடம் பயிற்சி பெற்று ரகசியமாக இந்தியாவுக்குள் நுழைந்து வருகிறார்கள். நாகா கொரில்லாக்கள் தங்கள் ராணுவத் தலைமை நிலையத்தை பர்மாவில் நிறுவியுள்ளார்கள். கொரில்லாக்களை மாநில எல்லையிலிருந்து விரட்டத்தான் முடிந்துள்ளதே தவிர அவர்களை அழித்தொழிக்க முடியவில்லை" என்று ராணுவ அதிகாரிகள் தோல்வியை ஒப்புக் கொள்கிறார்கள்.

எனவேதான் ஒப்பந்த நாயகர் ராஜீவ், சமீபத்தில் பர்மா சென்றபோது வடகிழக்கிந்திய போராளிகளை ஒழிப்பதைப்பற்றி முக்கிய நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு விவாதித்தார். இந்தியாவின் 'ஒருமைப்பாட்டுக்கு' வடகிழக்கிந்திய தீவிரவாதிகள் தலைவலியாக இருப்பதைப் போலவே, பர்மாவிலும் கம்



படிப்பகம்

www.padippakam.com

யூனிஸ்டுகளும், தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் அமைப்புகளும் உள்ளன. எனவே இருநாடுகளும் கூட்டாகச் சேர்ந்து போராளிகளை ஒடுக்குவது பற்றி விவாதித்துள்ளனர்.

ஏற்கனவே பர்மிய ராணுவ சர்வாதிகார அரசு கடந்த இரு ஆண்டுகளில் பலமுறை தாக்குதல் நடத்தியும் கூட கம்யூனிஸ்டுகளின் செந்தளப் பிரதேசத்தை அசைக்க முடியவில்லை. தேசிய சுயநிர்ணய உரிமைக்கான அமைப்புகள் மற்றும் கம்யூனிஸ்டுகளின் ஐக்கிய முன்னணியும் பரந்துபட்ட மக்களின் ஆதரவும் கூலிப்படைகளை புறமுதுகிட்டு ஓடவைத்தது அதே போலத்தான் வடக்கிழக்கிந்தியாவில் பிரிட்டிஷ் காலனியவாதிகளும் அதன்பிறகு நேரு, இந்திரா—மொரார்ஜி— ராஜீவ் உள்ளிட்ட அனைத்து 'ஜனநாயக சோசலிச' வாதிகளும் ராணுவத்தை ஏவி கொடிய அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டும்கூட அவர்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போரை அடக்கமுடியவில்லை. எனவேதான், 'இருநாடுகளும்கூட்டாகச் சேர்ந்து ஒடுக்குவதால் மட்டும் பிரச்சினை தீராது. மக்களின் மனங்களை நாம் வெல்ல வேண்டும்' என்கிறார்கள்.

இதற்காக், வடகிழந்தியாவின் ஏழு மலைத்தொடர்களில் ரகசிய ராணுவப்பள்ளியை இந்திய அரசு இயக்கி வருகிறது. 'கலக எதிர்ப்பு மற்றும் நாடுகளில் யுத்தமுறைப் பள்ளி' என்ற பெயரில் இயங்கும் இப்பயிற்சிப் பள்ளியில், காடுகள்—மலைகளில் மறைந்திருந்து திடீரென தாக்கும் கொரில்லாக்களை முறியடிக்கும் முறையுடன், உள்ளூர் மக்களின் சமூக பொருளாதார கலாச்சார வாழ்வைக்கற்று அவர்களுடன் ஐக்கியப்பட்டு அவர்களின் மனங்களை வெல்லவும், கலகப் போராளிகளைப் பிடித்து அவர்களின் மனதை மாற்றவும் கூலிப்படைகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இந்திய ராணுவம் மட்டுமின்றி இந்தியாவின் நட்பு நாடுகளுக்கும் பயிற்சியளிக்கும் சர்வதேச எதிர்ப்புரட்சி ராணுவப் பள்ளியாக இது திகழ்கிறது.

ஆனாலும், ராணுவம் ஒருபகுதியில் நீண்டகாலமாக போரிட்டுக் கொண்டிருப்பதானது எதிர் விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது. இது மக்களின் மனத்தில் ராணுவத்தின்மீது வெறுப்பையே தோற்றுவித்துள்ளது என்கிறார் மணிப்பூரின் முன்னாள் முதல்வர். 'இது தவிர, நீண்டகாலமாக இப்பகுதியில் ராணுவம் இருந்தும்கூட தீவிரவாதிகளைத் துடைத்தொழிக்க முடியவில்லை. இது நமது ராணுவத்தின் தார்மீக பலத்தையே கேலிக்குரியதாக்கி விட்டது. ராணுவ வீரர்களுக்கு கூடுதல் பயிற்சியளித்துக் கொண்டிருப்பதைவிட, உடனடியாக ராணுவத்தை வெளியேற்றுவதே சரியானது. நிர்வாகத்தை மாநில அரசுகளிடம்—போலீசிடம் விடவேண்டும். மாநில அரசுகள் கூடுதலாக நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டி தீவிரவாதிகளின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும். இன்றைய நிலையில் இதைவிட மேலான தீர்வு எதுவுமில்லை என்கிறார்.

ஆனால் அதிகாரச் சுவை கண்ட ராணுவமோ, "நாங்கள் இல்லாமல் மாநில அரசுகள் ஒருநிமிடம் கூட நீடிக்கமுடியாது; ராணுவத்தை வெளியேற்றச் சொல்வது தீவிரவாதிகளுக்கு விட்டுக் கொடுப்பதாகும்" என்று வெளியேற மறுக்கிறது. கடைசியில், யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளை வெளியேற்றப் போவதாக கூறிக்கொண்டு சென்ற அமைதிப்படை ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்தியதைப் போலவே, இப்போது இந்திய ராணுவத்தின் இரும்புப்பிடியில் வடகிழக்கிந்திய மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள்.

வடகிழக்கிந்தியாவிலுள்ள இந்திய ராணுவத்தின் வரலாறு, எண்ணிலடங்கா கொலை, கொள்ளை கற்பழிப்பு, சூறையாடல், கிராமங்களையும் பயிர்களையும் எரித்தல், மானபங்கப்படுத்தல் முதலான அட்டூழியங்களால் நிரம்பியதாகும். இந்திய ராணுவம் நாகா மக்களை நீண்டகாலமாக கட்டாய சேவைக்குத் துன்புறுத்தி வந்துள்ளது.

ராணுவத்துக்கு பெருங்குழிகளை வெட்டுவது. சேமிப்புத் தொட்டிகளைக் கட்டுவது, தண்ணீர் எடுத்துவருவது, விறகு சுமந்து வருவது (சாலைகள் இல்லாததால் லாரிகளில் ஏற்றிவர முடியாது) முதலான வேலைகளுக்கு கட்டாயப்படுத்தி வந்துள்ளனர். புரட்சியாளர்களுக்கு உதவுகிறார்கள் என்பதால் கிராமங்களை எரித்துவிட்டு நாகர்களை இந்திய ராணுவம் சித்திரவதை செய்த சம்பவங்கள் ஏராளம். நாகா இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் குழந்தைகளைக்கூட தனியே கொட்டியில் அடைத்து பட்டினி போட்டுள்ளனர்.

'வானமே இடிந்தாலும் சுதந்திரம் தரமாட்டேன்' என்றார் நேரு. 'அனைத்து கிளர்ச்சி நாகர்களையும் அழித்தே தீருவேன்' என்று கொக்கரித்தார் மொரார்ஜி. இந்தியப் பிரதமர்களின் மிருகத்தனமான ஆதிக்க உணர்ச்சியைத்தான் இந்திய ராணுவம் தனது செயலில் காட்டுகிறது.

சமீபத்தில், ஒநியாம் பகுதியில் அஸ்ஸாம் துப்பாக்கிப் படைமீது திடீர் தாக்குதல் நடத்தி ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு போராளிகள் தப்பியோடிய பிறகு,

## வடகிழக்கிந்திய தேசியஇன மக்கள்

வடகிழக்கிழக்கிந்திய பகுதி வாழ் மக்கள் மங்கோலிய வர்ண இனத்திலிருந்து (Race) தோன்றியவர்கள். இவர்கள் பேசும் மொழிகள் இதர இந்திய தேசிய இனங்களின் மொழிகளிலிருந்து மாறுபட்டவை. கலர்ச்சார ரீதியாகவும், ஆட்சி அமைப்பு முறையிலும் இவர்கள் பிற இந்திய தேசிய இனங்களிலிருந்து மாறுபட்டவர்கள். பூகோள அமைப்பு காரணங்களால் இப்பகுதி மக்கள் இந்தியப் பகுதிகளிலிருந்து தனித்தே இருந்துள்ளனர். ஆங்கிலேய காலனியவாதிகளை எதிர்த்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் இவர்கள் பிற இந்திய தேசிய இனங்களுடன் இணைந்து நின்றதுமில்லை.

இப்பகுதி மக்கள் மதிக்கும் தேசிய விரர்கள், இந்திய அரசு கூறிக்கொள்ளும் 'தேசியத்தலைவர்'களல்ல. மொகலாயர்களை விரட்டியடித்த அஹோம் தளபதியான லாசிட் பார்புகானை அசாமியர்களும் 1891ல் ஆங்கிலேயப் படையெடுப்பின்போது கோங்கியம் எனுமிடத்தில் வீரத்துடன் போராடிய பௌணா பிரஜாபாகியை மைட்டியர்களும் தங்களது தேசிய வீரர்களாகப் போற்றுகின்றனர். எந்த சமயத்திலும் நாகர்களோ, காரோ, காசி, மைட்டியர் பழங்குடி மக்களோ தங்களை இந்தியர்களாகக் கருதி அழைத்துக் கொண்டதுமில்லை.

'காட்டுமிராண்டிகளாகத் திரிந்த' நாகர்களையும் வடகிழக்கிந்திய பழங்குடி மக்களையும் 'நாகரீகப்படுத்து'வதாகவும், அவர்களை 'தேசிய நீரோட்டத்திற்கு' கொண்டு வருவதாகவும், 'இந்திய ஜனநாயகக் கட்டமைப்பிற்குள்' இழுத்து வருவதாகவும், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து (பொறுப்புகள் தராமல்) ஆளுவதாகவும் இந்திய அரசு பீற்றிக் கொள்கிறது. ஆங்கிலேயக் காலனியவாதிகள் இந்தியர்களை நாகரீகமாக்க ஆண்டதாக கூறுவதற்கும் இதற்கும் வித்தியாசம் ஒன்றுமில்லை.

வெள்ளையர்கள் பல்வேறு தேசிய இனங்களைப் பலாத்காரமாக இணைத்து இந்தியாவை ஒரே நாடாக்கி அடக்கி ஆண்டனர். காலனியவாதிகளை அடிபற்றிச் செல்லும் 'இந்திய ஜனநாயகக் குடியரசு', நாகா, மிஜோ, காரோ மட்டுமின்றி இன்னும் பல்வேறு தேசிய இனங்களையும் துப்பாக்கி முனையில் அடக்கி, இந்தியாவை தேசிய இனங்களின் சிறைக்கூடமாக்கி 'தேசிய ஒருமைப்பாட்டை' கட்டிக் காக்கிறது. ●

படிப்பகம்

www.padippakam.com






பர்மாவுக்குள் போராளிகள் பயிற்சி

ஆத்திரமுற்ற ராணுவம் அப்பாவி மக்கள்மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தி அப்பகுதியையே ரணகளமாக்கியுள்ளது. பத்திரிக்கையாளர்கள் அப்பகுதிக்கு நேரில் சென்று ராணுவத்தின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தியதோடு மாநில சட்டசபையே மத்திய அரசுக்கு கண்டனக் கடிதம் எழுதியுள்ளது.

மணிப்பூரில் இரு வேறு அரங்குகளில் மக்கள் போராட்டங்கள் வெடித்தெழுகின்றன. இந்து மத ஆதிக்கத்தை எதிர்த்து மைட்டியர்கள் போராடுகிறார்கள். இந்திய ஏகாதிபத்தியன் கலாச்சார அடக்குமுறையிலிருந்தும், இந்தியக்குடியரசின் காலனியாதிக்கத்திலிருந்தும் விடுபட வேண்டுமென இவர்கள் கோருகிறார்கள்.

மறுபுறம், பொதுவுடமைப் புரட்சியாளர்கள் இந்திய ஆதிக்கத்தை எதிர்த்து ஆயுதமேந்திப் போராடி வருகிறார்கள். 60—ம் ஆண்டுகளில் புரட்சியாள்ர்கள் மணிப்பூர் புரட்சிகர அரசாங்கம் என்ற ஆட்சி அமைப்பை மணிப்பூர் காடுகளில் நிறுவினர். அது செயலிழந்த பின்னர் 1978ல் மக்கள் விடுதலைப்படை, கிழக்கு பிராந்தியம் PLA என்ற புரட்சிகர அமைப்பை நிறுவி ஆயுதப் போராட்டத்தை துவங்கினர். மார்க்சிய— லெனினிய— மாசேதுங் சிந்தனையின் ஒளியில் மக்கள் யுத்தப் பாதையில் தொடர்ந்து முன்னேறிவருகின்றனர்.

இதுதவிர, மற்றொரு பொதுவுடமை புரட்சியாளர்களின் அமைப்பான கங்கிலிபாக் மக்கள் புரட்சிகர கட்சி PREPAK ஒப்பீட்டு ரீதியில் அதிக கொரில்லாக்களைக் கொண்டு ஆயுதப் போராட்டத்தில் முன்னேறி வருகிறது. இவற்றோடு புரட்சிகர மக்கள் முன்னணி, செம்படை என இரு போராளி அமைபபுகளும களத்தில் நிற்கின்றன. சுதந்திர நாகாலாந்திற்கான நாகர்களின் போராட்டம் நூறாண்டுக்கும் மேலாக நீடித்து வருகிறது, கிறிஸ்துவ சோசலிசம் பற்றி கூறி வரும் நாகா தலைவர் பிஜோ தலைமையிலான நாகா ஐக்கிய அரசாங்கம் NFG என்ற அமைப்பும், அதன் சந்தர்ப்பவாதப் போக்கை எதிர்த்து முய்வா தலைமையிலான நாகா தேசிய சோசலிஸ்டு கவுன்சில் NSCN என்ற அமைப்பும் ஆயுதமேந்தி போராடி வருகின்றன.

மிசோரத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடி வந்த மிஜோ தேசிய முன்னணியினர் அதன் தலைமையின் துரோகத்தனத்திற்குப் பிறகு—ராஜீவ்—லால் டெங்கா ஒப்பந்தத்திற்குப் பிறகு— அதிலிருந்து வெளியேறி புதிய அமைப்பை நிறுவி தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இது போலவே அசாம் ஒப்பந்தம் இன்று வரை நிறைவேற்றப் படாததால் வெறுப்புற்று, அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி ULFA என்ற புதிய அமைப்பை போராளிகள் கட்டியமைத்து போராடி வருகின்றனர்.

திரிபுராவின் பூர்வீகப் பழங்குடியினரின் உரிமைக்காக போராடும் திரிபுரா தேசிய சேவகர்கள் TNV அமைப்பு, இனவெறி பிடித்து வங்காளிகளை அழித்தொழித்துக் கொண்டிருக்கும்அதன் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கண்டு இந்திய 'குடியரசு' அஞ்சுகிறது.

இவை தவிர மேகாலயாவில் காசி—காரோ பழங்குடி மக்களும், மணிப்பூர்—திரிபுரா—மிஜோ மலைகள் ஆகிய பகுதியிலுள்ள கச்சார் பழங்குடி மக்களும், அருணாச்சல பிரதேசத்தின் பழங்குடியினரும் தங்கள் சுயாட்சிக்காக பல்வேறு அமைப்புகளைக் கட்டி போராடி வருகின்றனர்.

வடகிழக்கிந்திய மாநிலங்கள் மிகுந்த இயற்கைச் செல்வங்களைக் கொண்டவை. இந்தியாவில் கிடைக்கும் பெட்ரோலியத்தில் பெரும் பகுதி இங்கிருந்தே பெறப்படுகிறது. இங்கு விளையும் தேயிலை இந்திய ஏற்றுமதியில் மூக்கியத்துவம் பெற்றதும், சர்வதேசச் சந்தையில் புகழ் பெற்றதுமாகும். இதுதவிர அடர்ந்த காடுகளில் கிடைக்கும் பொருட்கள் மிகுந்த செல்வத்தை ஈட்டுகின்றன. இம்மாநிலங்கள் அண்டை நாடுகளின் எல்லையில் அமைந்துள்ளதாலும், மலைப்பகுதியும் அடர்ந்த காடுகளும் நிரம்பியிருப்பதாலும் ரா்ணுவ ரீதியில் முக்கியத்துவம் பெற்றதாகவும் உள்ளது.

எனவேதான் ஆங்கிலேய காலனியவாதிகளும், அவர்களின் அடியொற்றிச் செல்லும் இந்தியக் 'குடியரசும்' விடாப்பிடியாக தமது கட்டுப்பாட்டுக்கள் வைத்திருக்கிறது. இப்பகுதி மக்களின் நியாயமான சுயாட்சி விடுதலைக்கான கோரிக்கைகளை முற்றிலும் புறக்கணித்து கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது. எந்தவொரு சிறு போராட்டத்தைக்கூட 'தேச விரோதமானது' என்று ஒடுக்குகிறது.

இம்மாநிலங்களில் 19ம் நூற்றாண்டில் ஆங்கிலேய ராணுவத்துக்கு சப்ளை செய்யும் காண்டிராக்டர்களாக வந்த மார்வாரிகள் பின்னர், தேயிலைத் தோட்ட நிர்வாகிகளாகவும், தரகர்களாகவும் மாறினர். இன்று பெருநகரங்களில் கிட்டத்தட்ட அனைத்து சந்தைகளும்இவர்களது ஆதிக்கத்திலேயே உள்ளன. பின்னர்வந்த குஜராத்திகளும் சிந்திகளும் இவர்களைப் போன்றே ஏக



படிப்பகம்

www.padippakam.com



ஒய்நாம் கிராமத்தில் இச்சிறுவர்களும் கைது செய்யப்பட்டனர்

•

ஷில்லாங் நகரத்தில் ரோந்து சுற்றும் ராணுவம்



போகமாக உள்ளனர். வங்காளிகள் சிறு வியாபாரிகளாகவும், அரசு அலுவலர்களாகவும் உள்ளனர்.

எல்லைப் பகுதியில் இருப்பதால், அண்டை நாடுகளின் தாக்குதலுக்கு இலக்காகும் என்று கூறிக் கொண்டு தொடர்ந்து மத்திய அரசு இம்மாநிலங்களை புறக்கணித்தே வந்துள்ளது. வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் அற்பத் தொகையைக் கூட அதிகாரிகளும் காண்டிராக்டர்களும் சூறையாடுகின்றனர்.

அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் உள்ளான இப்பகுதி மக்கள் 'வெளிமாநிலத்தவரை— அன்னியர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கு, அவர்களை வெளியேற்று' என்பதிலிருந்து தனிமாநிலம், தனிப்பட்ட சலுகைகள், இந்துமத ஆதிக்கத்தை நீக்குவது என்பதுவரை பல தரப்பட்ட கோரிக்கைகளை முன் வைத்துப்போராடுகின்றனர். இவற்றுக்கு அடிப்படையாக உள்ள அரசியல் பொருளாதார நிலைமைகள், இப்பகுதி மக்கள் தேசிய இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருப்பதை தெளிவாக காட்டுகிறது.

வடகிழக்கிந்திய மக்களின் போராட்டங்களில், கிறிஸ்தவ திருச்சபைகள் மூலம் சிஐஏவும், மற்றும் ஆர்எஸ்எஸ் ஜனசங்கம் போன்ற இந்து மதவெறி அமைப்புகளும் தனது குறுகிய நோக்கங்களுக்காக ஊடுருவியுள்ளன. தேசிய இனங்களின் நியாயமான இந்த போராட்டங்களை நாம் ஆதரித்தால், நாம் சி.ஐ.ஏ உளவாளிகள், அமெரிக்கா கைக்கூலிகள் என்று போலிக் கம்யூனிஸ்டுகள் அவதூறு செய்கின்றனர். ஏகாதிபத்தியங்களின் ஊடுருவல் இருப்பதாலேயே தேசிய இனங்களின் சரியான நியாயமான போராட்டங்களை ஆதரிப்பது தவறாகி விடாது. அது பாட்டாளி வர்க்கத்தின் நலனுக்கு எதிரானதுமல்ல. ஆனால் போலிக் கம்யூனிஸ்டுகள், ஆளும்வர்க்கத்தின் தேசிய வெறிக் கொள்கையை ஆதரிப்பதை மூடி மறைப்பதற்காக வடகிழக்கிந்திய மக்களின் போராட்டத்தை பிரிவினைவாதம், தீவிரவாதம் என்று முத்திரை குத்தி வந்தனர். இப்போது ஈழப்பிரச்சினை மட்டுமல்ல; கூர்க்கா விடுதலைப் போராட்டத்தைக் கூட தேசவிரோதமானது என்று கூறி தம்மை தேசிய வெறியர்களாக காட்டிக் கொண்டுள்ளனர்.

இந்திய பிற்போக்கு அரசு தனது நம்பகமான கைக்கூலிகளைக் கொண்டு இப்பகுதிகளில் 'தேசிய'கட்சிகளை அமைத்து, அவை பங்கேற்கும் சிறுபான்மை சட்டமன்றங்களையும், தலைநகரங்களில் பெருங்கட்டிடங்களுக்குள் மட்டும் நிலவும் உள்ளூர் அரசாங்கத்தைக் காட்டி ஏதோ இப்பகுதியில் அமைதி திரும்பிவிட்டதாக ஏய்த்து வருகிறது. இந்திய ராணுவம், மத்திய ரிசர்வ் போலீஸ், எல்லைப் பாதுகாப்புப் படை, அஸ்ஸாம் துப்பாக்கிப்படை, கலக எதிர்ப்பு அதிரடிப் படை ஆகியவற்றைக் கொண்டு இப்பகுதி மக்களை காட்டுமிராண்டித்தனமாக ஒடுக்கிக் கொண்டே இப்பகுதி மக்களின் சுயாட்சி கோரிக்கைகளைத் தீர்த்து அவர்களை 'தேசிய நீரோட்டத்திற்கு' இழுத்து வந்து விட்டதாகவும் பீற்றிக் கொள்கிறது. ஆனால் போராளிகளின் ஐக்கியம், சித்தாந்த தயாரிப்புகள், சக்திகளின் புதிய சேர்க்கைகள், ஒரு ஆயுதந்தாங்கிய பொது எழுச்சிக்கான தயாரிப்பு ஆகியவை ஆளும்கும்பலின் முகத்தில் கரியைப் பூசியிருப்பதோடு, அவர்களை கிலியூட்டவும் செய்துள்ளன.

○ மனோகரன்

## கபடவேடதாரிகள்

பாசிச சந்நியாசி என்.டி. ராமராவ் ஆட்சியில் பல முறைகேடுகள் செய்துள்ளதாகவும் என்டிஆர் மீதான புகார்களுக்கு பூர்வாங்க ஆதாரம் உள்ளதாகவும் ஆந்திர உயர்நீதி மன்றம் கடந்த சனிக்கிழமை (ஜன—2ந்தேதி) அறிவித்தது. இதனை அடுத்து பலகட்சிகள் என்.டி. ராமராவ் ராஜினாமா செய்ய வேண்டும் என்றுகோரிக்கை எழுப்பியிருக்கின்றன.

ஆனால் அந்த சமயத்தில் கூடிய "இடது கம்யூனிஸ்டு"களின் "போலி"ட்பீரோ "என்.டி. ராமராவ் பதவி விலக வேண்டும் என்று கோருவது அரசியல் ரீதியாக பயனடைய விரும்புபவர்களின் விருப்பத்தை வெளிச்சமிட்டு காட்டுகிறது" என்று கூறியுள்ளது.

ஒரு புறம் பேர்பாக்ஸ், போஃபர்ஸ் ஊழல்களில் சிக்கி அம்பலப்பட்டு நிற்கும் 'ராஜீவே பாராளுமன்றத்தை கலைத்து மறுதேர்தல் நடத்து' என்று கூப்பாடு போட்டுக் கொண்டே தேசிய மாற்று நாடகமாடிக் கொண்டு நாயாய் அலையும் இவர்கள், ஊழலுக்கு பூர்வாங்க ஆதாரம் உள்ளது என்ற உயர்நீதி மன்ற தீர்ப்பை அடுத்து பதவி விலகு என்று கோரிக்கை எழுப்பப் பட்டவுடன் ஊழலின் நாயகன் தனது சகா என்பதால், கோரிக்கை எழுப்பியவர்களை "அரசியல் ரீதியில் ஆதாயம் தேடுபவர்கள்" என்று குரைக்கத் தொடங்கியுள்ளனர்.

உழைக்கும் மக்களை ஏமாற்றி தன்னை கடவுளாக சித்தரித்துக் கொண்டு, கோடிக்கணக்கான சொத்துக்களை குவித்துக் கொண்டும், நக்சல்பாரி புரட்சியாளர்களை நரவேட்டையாடும் பாசிசசந்நியாசி என்.டி.ஆர் மட்டுமா கபடவேடதாரி? சோசலிசம் பேசி உழைக்கும் மக்களை ஏமாற்றும் இந்த 'போலி'களும் கபடவேடதாரிகள் தான்.

பெ. செகதீசன்,
புதிய ஜனநாயக வாசகர் வட்டம்,
மங்கலம்.

படிப்பகம்

www.padippakam.com

# ஆடை தயாரிப்பு நிறுவனங்கள
# அவதிப்படும் பெண் தொழிலாளி

சென்னை—கிண்டி தொழிற் பேட்டையை நோக்கி காலை 8 மணிக்கே சாரை சாரையாக கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வந்து கொண்டிருக்கும் பெண் தொழிலாளர்களின் கூட்டத்தை புதிதாகப் பார்க்கும் எவரும் பிரமிப்பில் வாயடைத்துப் போவார்கள். ரெக்சின் அல்லது பிளாஸ்டிக்கால் ஆன ஒரு சிறு கை பையை கக்கத்தில் அடக்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக செல்லும் இவர்கள் ஏறக்குறைய அனைவருமே இளம் வயதினர். அவ்வளவு பெண் தொழிலாளர்களையும் கிண்டி—தொழிற் பேட்டையில் அடுத்தடுத்து இருக்கும் ஏற்றுமதி உடை தயர்ரிப்பு நிறுவனங்கள் சிறிது நேரத்தில் உள்வாங்கிக் கொள்ளும். அந்நிறுவனங்களுக்குள் செல்லும் ஆண் தொழிலாளர்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

இந்நிறுவனங்கள், பெண்களை பெருவாரியாக வேலைக்கு அமர்த்திக்கொள்வது ஏதோ அவர்களின் மீது கொண்ட தனிப்பட்ட அக்கறையினாலோ, இரக்கத்தினாலோ அல்ல. அல்லது பெண்களுக்கும் வேலை வாய்ப்பில் உரிய முக்கியத்துவம் கொடுத்து அவர்களை சமுதாயத்தின் முன்னணிக்கு கொண்டு வரவேண்டும் என்ற உயரிய நோக்கத்தினாலும் அல்ல.

ஆண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தினால் குறைந்தபட்ச கூலியாவது கொடுக்க வேண்டி வரும். சங்கம், போராட்டம் போன்ற 'பிரச்சினை'கள் எழும் என்பதற்காகத்தான் இந்நிறுவனங்கள் முழுக்க முழுக்க பெண் தொழிலாளர்களை மட்டும வேலைக்கு எடுக்கின்றன.


அரசு புள்ளி விவரப்படி, 70ம் ஆண்டுகளின் துவக்கத்தில் சென்னை நகரத்தில் இருந்த ஏற்றுமதி ஆடை தைக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை வெறும் 13. அத்தொழிலில் பணிபுரிந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையோ 3000க்கும் குறைவாக இருந்தது. இது 80ம் ஆண்டு ஆரம்பத்திற்குள் 91 நிறுவனங்களாகவும் 56000 தொழிலாளர்களை உள்ளடக்கியதாகவும் விரிவடைந்தது. இன்றோ 100க்கு மேற்பட்ட நிறுவனங்களாக பல்கிப் பெருகியிருப்பதோடு ஏறக்குறைய 1.75 லட்சம் தொழிலாளர்கள் இத்தொழிலில் பிணைக்கப்பட்டுள்ளனர்.

மறுபுறம், இந்நிறுவனங்களில் 70ம் ஆண்டுகளில் 80 சதவீதமாக இருந்த ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 80ம் ஆண்டுகளின் பிற்பகுதிக்குள் தலைகீழாக மாற்றப்பட்டு பெண் தொழிலாளர்களின எண்ணிக்கை 80 சதவீதமாகவும் ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 20 சதவீதமாகவும் குறைக்கப்பட்டு விட்டது.

காரணம், இந்நிறுவனங்களில் பணிபுரிந்த ஆண் தொழிலாளர்கள் பணி பாதுகாப்புக்காகவும், சட்ட பூர்வமான உரிமைகளுக்காகவும் தொடர்ச்சியாக போராட கிளர்ந்தெழுந்ததுதான்.

நகரம் முழுவதும் சிதறியிருக்கும் இந்நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்கள், தங்களுக்குள் ஒன்று சேர வாய்ப்பு இல்லாமலும், விடுமுறையோ ஓய்வோ இல்லாத வேலை நிலைமைகளாலும் 70ம் ஆண்டுகளின் மத்திவரை தங்களுக்கென ஒரு சங்கம் கூட இல்லாமல் உதிரியாய் இருந்தனர். கடுமையான முன்முயற்சிக்கிடையில் இத்தேக்கத்தை உடைத்தெறிந்த தொழிலாளர்கள் முதலில் ஆளும் அ.தி.மு.க. கட்சி தலைமையிலான "பொது தொழிலாளர்கள் சங்க"த்தில் 78ம் ஆண்டு துவக்கத்தில் 120 உறுப்பினர்களுடன் திரண்டனர். அதன் பிறகு ஒன்றன்பின் ஒன்றாக போலிக் கம்யூனிஸ்டுகளின் தலைமையிலான தொழிற்சங்கங்கள் உருவான போதும், அவைகள் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு உறுதியான தலைமையைக் கொடுக்க முடியாமல் வெறும் பெயர்ப்பலகை தொழிற் சங்கங்களாக முடங்கிக் கொண்டன.

ஏறக்குறைய 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை உள்ளடக்கிய 11 நிறுவனங்களில் பத்தாண்டு காலத்திற்குள் நடந்த பல போராட்டங்களால், பணி நிரந்தரம், சட்ட பூர்வ சலுகைகள், சம்பள உயர்வு போன்றவற்றில் முதலில் சிறிது அளவு வெற்றி பெற்றாலும், மறுபுறம் முன்னோடி தொழிலாளர்களை நிர்வாகம் பழிவாங்கும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாமல் திண்டாடினர். உதாரணத்திற்கு 76ம் ஆண்டில் மட்டும் 125 தொழிலாளர்கள், நிர்வாகத்தால் எவ்வித முன்னறிவிப்புமின்றி வேலை நீக்கம் செய்யப்பட்டனர். தொழிலாளர்களுக்கு தலைமை தாங்கிய துரோக தொழிற்சங்கங்கள் இதை எவ்விதத்திலும் தடுத்து நிறுத்தவில்லை.



இந்நிறுவனங்கள் தொழிலாளர்கள் மீது மிருகத்தனமான அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்ட போதெல்லாம், தொழிலாளர்களுக்கு தலைமை தாங்கிய தொழிற்சங்கங்களோ, சத்தர்ப்ப பொருத்தமில்லாத, நிர்வாகத்துக்கு சாதகமாக உள்ள, தொடர்ச்சியான வேலை நிறுத்தத்திற்குள் தொழிலாளர்களை அமுக்கி மேலும் திக்முக்காட வைத்தன. அதற்கு மேல் போனால், நிர்வாகத்துடன் அற்ப சலுகைகளுக்காக முடிவே இல்லாத பேச்சுவார்த்தை நடத்துவதையே மாபெரும் போராட்டமாகவும், வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்காக தொழிற் தகராறு நடுவர்(!) நீதிமன்றங்களில் வழக்குதொடுத்து, அதில் பல ஆண்டுகாலம் சிக்கித் தவிப்பதையே நீதிக்கான போராக சித்தரித்தனர். பாதிக்கப்பட்ட தொழிலாளர்களைக்கூட போராட்டமையத்தினுள் இழுக்காமல், அவர்களுக்காக நீதிமன்ற கட்டுக்களை சுமந்து திரிந்து கூலிக்கு மாரடித்த தலைவர்களால் தொழிலாளர்கள் வர்க்க உணர்வே இல்லாமல், விதியை நொந்துக்கொண்டு வேலை தேடி வெளிமாநிலங்களுக்கு ஓடுவதும், வீட்டில் முடங்கிக் கொள்வதுமாக . உடைந்த ஓட்டுசில்லுகளாக சிதறிப் போனார்கள்.

ஆண் தொழிலாளர்களை வெளியேற்றுவதில் முழுமையாக



படிப்பகம்

www.padippakam.com

வெற்றிகண்ட ஏற்றுமதி ஆடை தயாரிப்பு நிறுவனங்கள், அவ்விடங்களில் ஆயிரக்கணக்கில் பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டன. இவர்களின் ரத்தத்தை முழுமையாக உறிஞ்சி குடிக்க வசதியாக தங்கள் நிறுவனங்களின் நிர்வாக முறையையும், வேலைமுறைறையும் முற்றும் முழுக்க வேறாக—பகிரங்கமான கொத்தடிமைகளின் கூடாரங்களாக மாற்றி அமைத்தன.



ஒரே நிறுவனத்தின் பெயரின் கீழ் பலநூறு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு பதில், பினாமியாக பல நிறுவனங்களை உருவாக்கிக் கொண்டு தொழிலாளர்களை சிறுசிறு நிறுவனங்களின் கீழ்பிரித்தனர்.

ஆண் தொழிலாளர்களுக்கு கொடுத்துக்கொண்டிருந்தஉற்பத்தியுடன் இணைந்த (Piece system) கூலிமுறையை மாற்றி குழுஉற்பத்தி (Band system) முறையை அமுலுக்கு கொண்டு வந்தன. இதனால், ஆண் தொழிலாளர்களுக்கு கிடைத்து வந்த குறைந்த அளவிலான கூலியைக்கூட பெண்தொழிலாளர்கள் பெறமுடியாத அவல நிலை ஏற்பட்டது.

உதாரணத்திற்கு,ஒரு சட்டை தைத்தால் ஆண் தொழிலாளிக்கு கிடைத்த அதிகபட்ச கூலி, ரூபாய் 2.75. 8மணி நேரத்தில் ஒரு ஆண் தொழிலாளி 6லிருந்து 8 சட்டைகள் வரை தைப்பார். அதாவது ஒரு ஆண் தொழிலாளியின் அதிகபட்ச ஒரு நாள் கூலி 22. ஆனால், இந்நிறுவனங்கள் தற்போது ஒரு பெண் தொழிலாளிக்கு மாதம் ஒன்றுக்கு கொடுக்கும் சராசரி சம்பளம், அதிகபட்சம் 200 ரூபாய். ஆக, ஒரு பெண் தொழிலாளியால் மாதம் ஒன்றுக்கு கிடைக்கும் உபரி கொள்ளை ரூபாய் 400க்கு மேல். இதுதவிர, உற்பத்தியையும் குறைந்தபட்சம் 10 சதவீதம் கூட்டிக் கொண்டன.

குழு உற்பத்தி முறையில், பெண் தொழிலாளர்களை பிரித்து வைத்து வேலை வாங்குவது, வெறும் அடிமட்ட கூலிக்கொடுப்பதற்கு வசதியான முறை என்பதினால் மட்டும் அல்ல மாறாக, பெண் தொழிலாளர்கள்முழு ஆடை தைப்பது பற்றியான எந்த பயிற்சியும் பெறுவதை முற்றிலுமாக தடுப்பதற்காகவே இம்முறை பிரதானமாக கையாளப்படுகிறது.

இதனால் 'மிசின்' ஓட்ட தெரியாதவர்களைக்கூட பெருமளவில் வேலைக்கு அமர்த்திக் கொண்டு, அவர்களுக்கு ஓரிரு நாளில், ஆடையின் எந்த ஒரு பாகத்தையாவது மட்டும் தைக்க பயிற்சிக் கொடுத்து, கடைசிவரை அந்த வேலையை மட்டுமே வாங்குகின்றனர்.

உதாரணத்திற்கு, ஆண்கள் போடும் சட்டையை எடுத்துக் கொண்டால் அதற்கு 10பாகங்கள் இருக்கிறது.

இதில் ஏதாவது பாகம் மட்டும் (கழுத்துபட்டை தவிர) தைப்பதில் பயிற்சி கொடுத்து, மற்ற எந்த பாகத்தையும், குறிப்பாக, கழுத்துப்பட்டை, கழுத்துப் பட்டை இணைப்பு போன்றவற்றில் எந்த பரிச்சயமும் இல்லாமல், அரை வேலை, கால் வேலை தெரிந்தவராகவே நீண்ட நாள்வைத்திருக்கின்றனர். நிர்வாகத்துக்கு இசைந்து போகும் கருங்காலிகளாக இருக்கும் சிலருக்கு மட்டும், முழு ஆடை தைப்பதற்கான பயிற்சியும், குறிப்பாக கடினமான பாகங்கள் தயாரிப்பதில் கூடுதல் பயிற்சியும் கொடுத்து கையாட்களாகவைத்துக் கொள்கின்றனர்.

நிர்வாகத்துக்கு நெருக்கடியான காலங்களில் விசுவாசத்துடன் வேலை செய்பவர்கள் இவர்கள். இவர்களுக்கும், மூன்று, நான்கு ஆண்டுகளுக்குமேல் வேலை செய்பவர்களுக்கு மட்டும்தான் மேற்கூறிய மாத சம்பளம். இதில் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலருக்கு மட்டும் இன்னும் கூடுதலாக சம்பளம் ரூபாய் 50. 100 கிடைக்கும் மற்றபடி, இவர்களே எவ்வளவுதான் மாடாக உழைத்தாலும், நாயாக விசுவாசத்தோடு இருந்தாலும்,வேறு எந்த சட்டப்படியான சலுகைகளும் இவர்களுக்கும் கிடையாது. அதிகம் போனால் சில நிறுவனங்களில் இவர்களுக்கு மட்டும் மருத்துவ ஈட்டு வசதி மட்டும் உண்டு. அதிலும் இவர்கள் வாங்கும் அந்த 300 ரூபாய்சம்பளத்துக்கு ஈடாகக்கூட அவ்வசதி கிடையாது. "உதவியாளர்" என்று தினக் கூலியாக காண்பித்து, வருடத்திற்கு சில பத்து ரூபாய்களைத்தான் நிறுவனத்திலிருந்து கொடுக்கிறார்கள்.

இவர்களுக்கே இந்த கதி என்றால், வேலையில் புதிதாக சேரும் பெண் தொழிலாளர்களுக்கும், ஓரிரு ஆண்டுகள் மட்டுமே ஆனவர்களும், நிர்வாகத்துக்கு பல் இளிக்காமல், வேலை உண்டுதான் உண்டு என்றுபணி புரிபவர்களுக்கும் இருக்கும் பணிநிலைமைகளும் கிடைக்கும் கூலியும் சொற்களால் முழுமையாக புரிய வைக்கமுடியாத அளவு துயரமிக்கவை.

பெரும்பாலான நிறுவனங்கள் பெண் தொழிலாளர்களிடம்ஏதாவது ஒரு பிரிவு தையல் வேலை வாங்கிக் கொண்டு, அவர்களை, "உதவியாளர்"கள், "சரி பார்ப்பவர்கள்" 'பேக்கிங்' பிரிவில் இருப்பவர்கள் என்று கணக்கு காட்டி, பல மாதங்கள், சில வருடங்களானாலும் வெறும் தினக்கூலியாக 3லிருந்து 5 ரூபாய் மட்டுமே தருகின்றன. விடுமுறை நாளில் கூலி கிடையாது. உடல்நிலை மோசமாகி சிலநாட்கள் விடுப்பு (கூலி இல்லாமல்தான்) அடுத்து வேலைக்கு சேர்த்துக் கொள்ளும்போது, வக்கிரமான ஆயிரத்தெட்டு நையாண்டி கேள்விகள். சிறிது எதிர்ப்பு தெரிவித்தாலும் அடுத்து அங்கு வேலை கிடைக்காது. பொய்யாகவாவது சிரித்துக் கொண்டே சமாதானம் சொல்ல வேண்டும்.

இரவு நேரத்தில் பணிபுரிய மறுத்தாலும், நிர்வாகத்தின் திடீர் உத்தரவின் பேரில், மாலை நேரத்தில் நீண்ட நேரம்—இரவுவரை—வேலை செய்யும்போது, பெற்றோர்கள், வயசுப் பெண்களை வேலைக்கு அனுப்பிய பதற்றத்தோடு தேடி வரும்போதும், நிர்வாகம் பார்க்கும் நபர்கள் 'அடிக்கும்' வக்கிரமான கிண்டல்கள் கேட்க சகிக்காது.

இளம் பெண் தொழிலாளர்கள் மூச்சு திணறும் இச்சூழலில் காயடிக்கப்பட்டு, சீரழிவு கலாச்சார விஷப் புகையில் பல்வேறு அளவுகளில் மூழ்கிவிடுகின்றனர். இவர்களில் அதிகமானோர், தங்கள் நடை, உடை, பாவனைகளிலாவது ஆளும் வர்க்க கலாச்சாரத்தை எட்டிவிட வேண்டும் என்ற போதை





படிப்பகம்

www.padippakam.com



8 ரூபாயில் ஒருஆடை யைத் தயாரித்து இவற்றைப் போல் 4 மடங்கு அதிகம் விலை வைத்து விற்கின்றனர்

யில், குடும்ப வறுமை பற்றியோ, சமூக பின்னணி பற்றியோ சிறிதும் கவலை கொள்ளாமல், தாங்கள் பெறும் அற்ப கூலி முழுவதையும் தங்களை அலங்கரித்துக் கொள்வதற்கான பொருட்களை வாங்குவதிலேயே வீணடித்து விடுகின்றனர். செலவு 'கையைக் கடிக்கும்'போது 'மாற்று' வழியை தேடிக் கொள்கின்றனர். இம்மாதிரியான நபர்களின் வருகைக்காகவே காத்திருக்கும் இந்நிறுவனங்களில் இருக்கும் நிர்வாக எடுபிடிகள், இவர்களை நம்பகமான கருங்காலிகளாக மாற்றிக் கொள்கின்றனர்.

ஏற்றுமதி ஆடை தைக்கும் நிறுவனங்களுக்கு கேட்பாரற்று கிடக்கும் புதையலாக இருப்பது அற்ப கூலிக்கு அடிமைகளாக கிடைக்கும் பெண் தொழிலாளர்கள் மட்டுமல்ல, ஏற்கனவே வெளியேற்றப்பட்ட திறமை வாய்ந்த ஆண் தொழிலாளர்களும் இப்படித்தான் யாரும் கேட்பாரற்று பெருவாரியாக குவிந்து கிடக்கின்றனர். இப்போது, அவர்கள் நிறுவனத்திற்கு வெளியே கிடப்பதால், இனிமேல் அவர்களிடமிருந்து கோரிக்கை, போராட்டம் என்ற எந்தப் பிரச்சினையும் தமக்கு வராது என்பதால், தைரியமாக அவர்கள் அனைவரையும் சிறு சிறு 'கான்ட்ராக்ட்' மூலம் (600க்கும் மேற்பட்ட பெரிதும் சிறிதுமான குழுக்கள் சராசரியாக 3 முதல் 30 தொழிலாளர்கள் உள்ளடக்கியது) சுலபமாக சுரண்டிக் கொழுக்கிறது.

தங்களுடைய நேரடி கண்காணிப்பின் கீழ் இருக்கும்—பெண் தொழிலாளர்கள் வேலை செய்யும்—நிறுவனங்களை தொழில்துறை சட்ட விதிகளுக்கு உட்பட்டவை (!) என்றும், சிறு சிறு 'கான்ட்ராக்ட்' மூலம் பிடித்து வைத்துள்ள ஆண் தொழிலாளர்கள் (இதிலும் 20 சதவிதம் பெண் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்) குழுமங்கள்—சட்ட விதிகளுக்கு உட்படாத நிறுவனங்கள் என்றும் பெயரிட்டு அழைக்கின்றனர்.

இக் 'கான்ட்ராக்ட்'காரர்கள் 10 'மிஷின்'களுக்குள் வைத்திருப்பவர்களாய் இருந்தால், வேலை கொடுக்கும் நிறுவனங்கள் தாங்களே அனைத்து பாகங்களையும் வெட்டி கொடுத்து தையல் வேலையை மட்டும் இவர்களிடம் வாங்கிக் கொள்கின்றன. அதற்காக ஒரு சட்டைக்கு கொடுக்கும் கூலி 5-25 ரூபாய். 10 'மிஷின்'களுக்கு மேற்பட்டு வைத்திருப்பவர்களாய் இருந்தால் பெரும்பாலும் அவர்களிடம் துணியை அப்படியே கொடுத்து ஆடையாக வாங்கிக் கொள்கின்றன. 'கட்டிங்' மற்றும் பட்டன் முதலியவைகளை இவர்களே செய்து கொடுக்க வேண்டும். இதற்கு கூலியாக ரூபாய் ஒன்றிலிருந்து 2 வரை அதிகமாகக் கொடுக்கின்றன.

'கான்ட்ராக்ட்' கொடுக்கும் நிறுவனங்களிடமே நேரிடையாக சென்று ஆண் தொழிலாளி அதிகபட்சம் ரூபாய் 2-75க்கு ஒரு சட்டையைத் தைத்துக் கொடுக்கத் தயாராய் இருக்கும்போது அந்நிறுவனங்கள் 5-25 ரூபாய் கூலி கொடுத்து வெளியில் தைத்து வாங்குவது ஏதோ 'கிறுக்கு' பிடித்து போய் செய்யவில்லை. திடீரென வரும் பெரும் ஆர்டர்களை உரிய நேரத்தில் முடித்து கொடுத்து, வியாபார போட்டியில் நிலைத்து நிற்பதற்காகவும், 'ஆர்டர்' பெறும் இடங்களில் 'மாதிரி'களை தரமாக காண்பித்து இன்னும் அதிகமாக ஆர்டர் பிடிப்பதற்காகவும் இவ் வெளி உற்பத்தியை பயன்படுத்துகின்றன.

எனவே, திடீர் தேவைக்கு, உடனடியாக முழு வேலையும் தெரிந்த தொழிலாளர்கள் கிடைப்பது அரிது என்பதால் எல்லா பெரு நிறுவனங்களும் அம்மாதிரியான நேரங்களில் தொழிலாளர்களை கவர்ந்திழுக்க முயற்சிக்கும். அப்போட்டியில்

தோற்றுவிடக் கூடாது என்
தாலும், உபரி வேலை இல்லா
நேரங்களில், உபரி தொழிலாள
களை ஒரே நேரத்தில் வெளியேற்
வது பிரச்சினைகளை தோற்றுவி
கும் என்பதாலும் சிறு சிறு கான்
ராக்ட்காரர்களை தேவையா
போது பயன்படுத்திக் கொண்
வேண்டாத நேரங்களில் வீசியெறி
து விடுகிறது.

மூர்க்கத்தனமான தொழிலாள
விரோத கொள்கையும், மிருகத்த
மான லாபவெறியும்கொண்டு அ
யும் நிறுவனங்களில், சென்னையி
முன்னணியில் நிறபவை, அ
யாறு, தி. நகர், ராயபுரம் பகு
களில் இருக்கும் ஹாஜிமுஷ
தேனாம்பேட்டை, வடபழனி பகு
களில் இருக்கும் 'குப்தா க
மென்ட்ஸ்', வண்ணாரப்பேட்
யில் பரவலாக இருக்கும் 'ஜி.
கார்மென்ட்ஸ்', மைலாப்பூர் பகு
யில் இருக்கும் 'சிவன் இன்ட
நேஷனல்', கிண்டி தொழிற்பே
டையில் அடுத்தடுத்துஇருக்கும் 1
கும் மேற்பட்ட நிறுவனங்கள், ப
முனையில் இருக்கும் ஃபிரியா எக்
போர்ட்ஸ் என்பவை இதில் சில.

பருத்தி துணிகளை ஒரு மீட்ட
ரூபாய் 2-50க்கும் கீழாக மில்க
லிருந்து நேரிடையாகதருவித்து அ
கம்போனால் 8 ரூபாயில் ஒருஆ
யை தயாரித்து இவற்றைப் போ
4 மடங்கு அதிகம் விலை வைத்
வெளிநாட்டில் விற்பதற்கு, சொந்
நாட்டு மக்களை புழுவினும் கேடா
வாட்டி எடுத்து வதைக்கின்ற
உழைப்பாளிகள் மீது கிஞ்சித்து
அக்கறையற்று லாபவெறி கொண்
அலையும் இம் மக்கள் விரோதிக
தையல் தொழிலில் அறிமுகப்படுத்
இருக்கும் உற்பத்தியுடன் இணை
கூலி, குழு உற்பத்தி போன்
முறைகளினால், தொழிலாளர்க
தையல் ஊசியோடு ஒரு ஊசியா
மாறி 'ஓய்வு ஒழிச்சல்' அற்
தொடர்ச்சியாக அனைத்து நரம்
களையும் இயக்கிக் கொண்டிருப்
தால் வெகு சீக்கிரம் கண்பார்
யும், அதற்கு அடுத்து வயிற்று
பாகம் எப்போதும் மடிந்தே இருப்
தால், உணவு தேவையான அள
உட்கொள்ள முடியாமல் வயி
சுருங்கி மிக விரைவில் குடற்பு
நோய்க்கும் ஆளாகின்றன
உழைக்கும் போதே 'தரித்தி
நிலையில் இருக்கும் இவர்க
உழைக்கவே முடியாதபோது யா
டம் போய் கையேந்துவார்க
இந்த நிலையில், இளம் பெண் க
யும் வரைமுறையற்ற அளவி
சுரண்டும் இம் முதலாளிகள் இ
தொழில் பிரிவு உழைப்பாளிகளி
நிகழ்காலத்தை மட்டுமல்ல எதி
காலத்தையும் அவர்களுடை
சந்ததிகளையும் முடமாக்கு
'மாபாவிகள்'.

● குணசேகர



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளூராட்சித் தலைவர்களா? ஊரைவிழுங்கும் முதலைகளா?

சூசைராஜ்

**அதிகார முறைகேடுகள் மூலம் கிடைக்கும் பகற்கொள்ளையுடன சேர்மன் சூசைராஜ் திருப்தி அடைவதில்லை. அவ்வப்போது தன்கூட்டத்துடன் நேரிடையான திருட்டிலும் ஈடுபடுவதுஉண்டு.**

தமிழகத்தில் கொடிய வறட்சிக்கு
லக்கான மாவட்டங்களில் புதுக்
காட்டை மாவட்டமும் ஒன்று.
ங்கு, பஞ்சத்தில் உழலும் வறிய
வசாயிகளுக்கு உதவிகள் செய்ய,
ராட்சி, நகராட்சிகள் மூலமாக,
டன்களும், மான்யங்களும் வழங்கி
ல வளர்ச்சி திட்டங்களை நிறை
வற்றி வருவதாக கூறி வருகிறது
ரசு.

சொல்லப்படும் இத்திட்டங்
ளில் ஒன்றுகூட வறிய உழவர்
ளின் வாழ்க்கைக்கு கடுகு
ளவும் ஆதாரமாக இல்லை.
றாக உள்ளூர் பஞ்சாயத்து
லைவர்கள், 'யூனியன் சேர்மேன்'
ள், அவர்களுடைய கையாட்
ளுக்கு மட்டுமே வளங்கொழிக்கும்
ணத் தோட்டமாக விளங்குகிறது.
திகார முறைகேடுகள் மூலம்
ரசின் திட்டங்களை பங்கு
பாட்டுக் கொள்வதில் இவர்கள்
ட்சி வேறுபாடின்றி ஐக்கியமாகின்
னர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில்
க்கொள்ளை கும்பல்களில் தனிப்
பரும் தலைவராக விளங்குபவர்
ச.ஆ. சூசைராஜ். இவர் கரம்பக்
டி பஞ்சாயத்து யூனியன் சேர்
ன். திமுக கட்சியின் சார்பாக
பாட்டியிட்டு வெற்றி பெற்றவர்.
வர் ஊராட்சி ஒன்றியத்தின்
லம் 'மக்கள் நலனுக்'கென வந்த
னைத்து திட்டங்களையும், தன்
ய நலத்திற்கும், தனக்கு சேவகம்
ய்யும் அடியாட்களுக்கும், ஒரு
ல அதிமுக காரர்களின் நலனுக்கு
ட்டுமே பயன்படுத்தி வருகிறார்.

னது அடியாட்களும், கோட்டைக்
டு கிராம திமுக கட்சி உறுப்பி
ர்களுமான முத்து வீரன் மகன்
சல்லன், நல்லான் மகன்
வள்ளைச்சாமி, கருப்பன் மகன்
ரி, சுப்பன் மகன் பெறமன்,
ருப்பன் மகன் முத்துச்சாமி,
ன்னான் மகன் ரெங்கன் பேரன்ற
ஆதி திராவிடர்களை பினாமியாக
வைத்து, ஏறக்குறைய 33,000
ரூபாயை தானே சுருட்டிக் கொண்
டார். நபர் ஒன்றுக்கு அனுமதிக்
கப்பட்டகடன் ரு 5,500. இதில்
மான்யம் ரு 1833. இதற்காக
வர்கள் கையெழுத்து போடும்
போது, ஒரு வேளை ஓட்டல்
சோறும், சில நூறு மில்லி
'பட்டை' சாராயமும் கைமாறு
பெற்றுக் கொண்டு வீடு வந்து
சேர்ந்தனர்.

ஆதி திராவிடர்கள் நலனுக்
கென ரூபாய் 3லட்சம் செலவில்
ஆழ்குழாய் கிணறு அமைக்க
அனுமதி வாங்கியவர், ஆழ்குழாய்
கிணறை அரசு தீர்மானித்த இட
மான ஆதி திராவிடர்கள் நிலம்
அதிகம் உள்ள இடத்தில் அமைக்கா
மல், தனக்கும் தன் குடும்பத்தாருக்
கும் சொந்தமான 30 ஏக்கருக்கும்
மேற்பட்ட அளவு நிலம் உள்ள
இடத்தில் அமைத்து, ஆழ்குழாய் கிணறு பாசனத்தை தனக்கே சொந்தமாக்கி கொண்டார்.

ஊரே எதிர்த்தாலும், உயர் மட்ட அதிகாரிகள், அரசியல் வாதிகள் தனக்கு பக்க துணையாக இருக்கும் தைரியத்தில், ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் ஆயிரக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள குடிநீர் ஆழ்குழாய் கிணறு இரும்பு குழாய்களையும் வெளியில் விற்று காசாக்கிவிட்டு, தன் திருட்டை மறைக்க, ஊராட்சி ஒன்றியத்தில் இரவுக் காவலராக பணிபுரிந்த கருப்பையா என்பவரின்மீது பழி சுமத்தி அவரை வேலை நீக்கம் செய்து விட்டார். அந்த வேலைக்கு கணேசன் என்பவரிடம் ரூபாய் 2000ஐ லஞ்சமாக பெற்று அவரை புதிய இரவு காவலராக நியமித்து இருக்கிறார். இதே மாதிரி, தன் கீழ் பணி புரியும் சத்துணவு அமைப்பாளர்களில் யாரையாவதுஒருவரை வெளியேற்றிவிட்டு செல்லையா என்பவரை காலியாகும் இடத்தில் அமர்த்துவதற்காக அவரிடம் லஞ்ச முன்(!) பணமாக ரூபாய் 2000 பெற்றுக் கொண்டுள்ளார்.

இப்படி, 'பல வழி'களிலும் வரும் பெரும்பணத்தில் தொடர்ந்து மிதப்பதால், உடல் திணவெடுத்து பல பெண்களின் வாழ்க்கையையும் இவர் சூறையாடி இருக்கிறார். இவருடைய காமவெறிக்கு தன் மகளை பறிகொடுத்த சின்னையன் என்பவர் மானம் தாங்காமல் தற்கொலையேசெய்துகொண்டார். புதுக் கோட்டை தங்கும்விடுதிகளில் ஒரு முறை இவர் விலை மாதர்களுடன் கைது செய்யப்பட்டு, பிறகு மேல்மட்ட சிபாரிசால் விடுவிக்கப்பட்டார். அந்த வழக்கை சரிக்கட்டுவதற்கு ரிக்ஷா தொழிலாளி ஒருவரைப் பிடித்து அவர்மீது விபச்சார வழக்கு போட்டு கோர்ட்டில் தண்டம் கட்டி தப்பித்துக் கொண்டார்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு, இவற்றில் மூழ்கி எழுந்த ஒரு 'பிரபல கேடி'தான் சூசைராஜ் என்பதற்கு எண்ணற்ற ஆதாரங்கள் உண்டு. இருந்தும், இவர் இன்றளவும் மக்களின் தலைவனாக வலம் வருவதற்கு காரணம், மேல்மட்ட ஆட்சி அதிகார கும்பலுடன் இவருக்கு இருக்கும் செல்வாக்குதான். உதாரணத்திற்கு, முறைகேடாக தன்னுடைய நிலத்தில், பொது ஆழ்குழாய் கிணறை அமைத்துக் கொண்டதை எதிர்த்து நீதி கேட்ட மக்களிடம் சமரசம் செய்ய வந்த அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், ''நாம் எல்லாம் உறவினர்கள்(!) பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்ளை வேண்டும்'' என்று வெட்கமில்லாமல், சமூக விரோதி சூசைராஜிற்கு பரிந்து பேசி, அதே நேரத்தில் கண் துடைப்புக்காக, ஆழ்குழாயின் மின் இணைப்பை நிறுத்தி வைப்பதாகவும் நீதி வழங்கிவிட்டு சென்றுள்ளனர். இவ்வளவு அக்கிரமங்கள் புரிந்த சூசைராஜின்மீது எந்தவித நடவடிக்கையும் இல்லை. மாறாக 'இது எல்லாம் சகஜம்தான், பெரிது படுத்த வேண்டாம்' என்ற பாணியில் ஊர்மக்களை மறைமுகமாக மிரட்டிவிட்டு சென்றனர்.

பாதிக்கப்பட்டவர்களின் ஆதரவாளராக காட்டிக் கொள்ள முன் வந்து மனுகொடுப்பது, உண்ணாவிரதம் என்று பிரச்சினையின் உள்ளே புகுந்த இ. காங்கிரசு மாவட்டத் தலைவர் கருக்காக் குறிச்சி சுவாமிநாதனும், அதிகாரிகளின் செல்லப் பிள்ளையாக இருப்பதிலேயே குறியாய் இருந்தார். சூசைராஜை எதிர்த்து ஊராட்சிமன்ற தேர்தலில் தோற்றுவிட்ட இவர், திரும்பவும் மக்களின் மனங்களில் இடம்பிடிக்க வந்து வாலறுந்த நரியாக இந்தபக்கமும் அந்த பக்கமும் திரிந்துக் கொண்டிருக்கிறார்.

உழைக்கும் மக்கள், இந்த ஏமாற்றுப் பேர்வழிகளின் பசப்பு வார்த்தைகளுக்கு மயங்கிவிடாமல், தாழ்த்தப்பட்ட மக்களின்மீது இத் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ள திடீர் காதலை புரிந்துகொள்ள வேண்டும்.

தகவல்:

விவசாயிகள் விடுதலை முன்னணி
திருவோணம் ஒன்றியம்



படிப்பகம்

www.padippakam.com

உலகம் முழுதும் அணு ஆயுதங்களை எதிர்த்து உழைக்கும் மக்கள் போராடிக் கொண்டிருக்கும்போது, சாவு வியாபாரிகளான ரஷிய—அமெரிக்க வல்லரசுகளே சமாதான நாடகமாடிக் கொண்டிருக்கும்போது, இங்கே இந்தியாவும் பாகிஸ்தானும் போட்டி போட்டுக் கொண்டு அணு ஆயுதக் குவிப்பிலும், தயாரிப்பிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. உலகிலேயே பின்தங்கிய ஏழைநாடுகள், கடனுக்காக கையேந்தி நிற்கும் நாடுகள், வறுமையிலும் பட்டினியிலும் பரந்துபட்ட மக்கள் சிக்கித் தவிக்கும் நாடுகள் இவை. ஆனால்இரு நாட்டு ஆளும் வர்க்கங்களின் தேசிய—மத—போர்வெறியின் விளைவாக இரு நாடுகளின் சர்வாதிகாரிகளும் நவீன ஆயுதங்களை மட்டுமல்ல, அணு ஆயுதங்களையும் போட்டி போட்டுக் கொண்டும்ஒருவரையொருவர்'பிளாக்மெயில்' செய்தும்குவித்து வருகிறார்கள். இனி இந்துமாக்கடல் பிராந்தியம் அமைதி மண்டலமாக இருக்கப் போவதில்லை. அணு ஆயுதப் போருக்கான தளமாகும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது.

# இந்தியா-பாகிஸ்தானின் அணு ஆயுத போட்டா போட்டி

சுவீடனிலிருந்து பீரங்கி வாங்கி ராஜீவ் கொள்ளையடித்தார் என்ற குற்றச்சாட்டுக்குமத்தியிலும், ஸ்வீடனுக்கே சென்று அந்த நாட்டோடு சேர்ந்து, ஆறு நாடுகளின் கூட்டமைப்பு மாநாட்டில் ஆயுதக்குவிப்பைத் தடுப்போம்! போர்களற்ற உலகைக் காண்போம் என்று ராஜீவ் முழங்குகிறார் என்றால்,அவர் எப்பேர்பட்ட கில்லாடி! என்று அவரின் எடுபிடிகளே மூக்கின்மேல் விரலை வைக்கின்றனர்.

'உள்நாட்டில் மட்டுமல்ல; அண்டை நரட்டுக்கும் அமைதிப் படையை அனுப்பி சமாதானத்துக்கும் அமைதிக்கும் பாடுபடும் ஒரே தலைவர் ராஜீவ்! தாயைப் போல பிள்ளையாக இப்போது இந்தியா, சுவீடன், மெக்சிகோ, கிரீஸ், டான்சானியா, அர்ஜெண்டினா ஆகிய ஆறு நாடுகளின் கூட்டமைப்பு மாநாட்டில் உலக சமாதானத்துக்கு உரக்க குரல் கொடுத்து அமைதிக்கும் அணு ஆயுத ஒழிப்புக்கும் பாடுபடுகிறார்' என்று பாசிச கும்பலின் அறிவார்ந்த துதிபாடிகள் புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

சமீபத்தில் ஸ்டாக்ஹோம் நகரில் நடந்த ஆறுநாடுகளின் கூட்டமைப்பு மாநாட்டில் அணு ஆயுதங்களை ஒழிக்க ராஜீவ் அறைகூவல் விடுத்துக் கொண்டிருந்த போதுதான், ரஷியாவிடமிருந்து குத்தகைக்கு வாங்கப்பட்ட அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் இந்துமாக்கடலில் வலம்வந்து கொண்டிருந்தது. இந்துமாக்கடலைஅமைதிமண்டலமாக்கப் பாடுபடுவோம் என்ற இந்தியாவின் முழக்கம் வெறும் வாய்ச்சவடால்தான் என்பதை இந்நிகழ்ச்சி திரைகிழித்துக் காட்டியது.

உடனே அமெரிக்க எஜமானர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்தார்கள். 'தெற்காசிய பிராந்தியத்தில் புதிய ஆயுதக்குவிப்புக்கான அபாயம் ஏற்பட்டுள்ளது. அதுபற்றி சம்பந்தப்பட்ட அரசுகளுடன் விவாதிப்போம் என்று மறைமுகமாக எதிர்ப்பு தெரிவித்தார்கள்.



எங்கே தனது சமாதா
அரிதாரம் கலைந்து விடுமோ
என்று மிரண்டு போன இந்
அரசு பாகிஸ்தான் மீது குற்ற
சாட்டியது. இதற்கு சாதகமா
சமீபத்தில் மே. ஜெர்மனியிலிருந்
ரகசியமாக கப்பல்மூலம் அ
வெடிப்புக்கான சாதனங்கள
பாகிஸ்தான பெற்றுள்
தாக செய்தி வெளியாகியிருந்த
"கடந்த 11 ஆண்டு காலமா
திருட்டுத்தனமாகவும் ஏமாற்றி
பாகிஸ்தான் அணு உலைகளை
கட்டியமைத்துள்ளது. இ
போது மே.ஜெர்மனியிலிருந்துஅ
வைப் பிளப்பதற்கான சாதன
களைபாகிஸ்தான் கடத்திவந்தத
மூலம் திருட்டுத் தொழிலிருந்
கடத்தல் தொழிலுக்கு முன்னே
யுள்ளது. இந்நிலையில் பாகிஸ்
னுக்கு கண்ணை மூடிக் கொண்
அமெரிக்கா ஆயுத உதவி செ
வதை ஆட்சேபிக்கிறோம். இ
பாகிஸ்தானின் ரகசிய அணு ஆ
தயாரிப்பு சதிக்கு உதவுவதாகு
என்று எகிறிப் பாய்ந்து சாடிய
இந்திய அரசு.

உடனே, பாகிஸ்தானின் வெ
யுறவுச் செயலாளர் அப்துஸ்
தார், "ரசியாவிடமிருந்து அ
ஆயுத நீர்மூழ்கி கப்பல் வாங்கி
விவகாரத்தை திசைதிருப்பவே இ
தியா இப்படி கூப்பாடுபோடுகிற
என்று எதிர்குற்றஞ்சாட்டி வா
டைத்தார். இந்திய அரசே
'அந்த நீர்மூழ்கிக் கப்பலில் அ
ஆயுதங்களே இல்லை' என்று த
னிலை விளக்கமளித்து 'உத்தம
வேடம் போட்டது.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை
என்ற கதையாக, இந்த நீர்மூழ்
யில் அணு ஆயுதங்களே இல்ல
என்று இந்திய அரசு மறுத்த
கொண்டிருக்கும்போதே, கப்ப
படை அதிகாரிகளும் தளபதி
உண்மையை உளறிக் கொட்டிவி
டார்கள். கப்பற்படை தளப
தகிலியாணி, "சீனாவோ பாகி
தானோ இனி கடல்வழியாகநம்ம
மிரட்ட முடியாது. மரபு ரீதியா
ஆயுதங்களைவிட இது முன்னே
றமே தவிர, ஆதிக்க நோக்கத்
கானதாக கருதக்கூடாது" என்
றார்.

"பாகிஸ்தான் இன்னமு
நமக்கு அச்சுறுத்தலாகவே உ
ளது. எதிர்கால யுத்தத்தில் கராச்
துறைமுகத்தை முற்றுகையிடுவ
முக்கிய குறியாக இருக்கும். அ
ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் இ
நோக்கத்தை ஈடேற்றும். ...19
யுத்தத்தின்போது அமெரிக்கா ஏ
வது கப்பற்படையைக் கொண்
வந்து நிறுத்தியதை ந
மறந்துவிட முடியாது. நம்மிட
அணு ஆயுத நீர்மூழ்கி இரு
தால், இனி அத்தகைய அபாய
ஒரு போதும் நேராது" என்றுபே
வெறியோடுகப்பற்படை தளபதி
கொக்கரிக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவின் விஸ்தரிப்பு மற்றும் பிராந்திய மேலாதிக்க கொள்கைகளை நியாயப்படுத்தி வந்த தேசிய வெறியர்கள் இப்போது பகிரங்கமாகவே அணு ஆயுதக் குவிப்பையும் நியாயப்படுத்துகின்றனர். பாசிச ராஜீவ் கும்பல் மட்டுமல்ல, ஆளும் வர்க்கத்தின் எந்தப் பிரிவு ஆட்சிக்கு வந்தாலும் இந்தக்கொள்கையிலிருந்து பின்வாங்கப் போவதில்லை.


ஆளும் காங்கிரசு கும்பலின் விஸ்தரிப்புப் போர்வெறிக் கொள்கை யாவரும் அறிந்ததுதான். அதே சமயம் விதிவிலக்கின்றி எல்லா ஓட்டுக் கட்சிகளும் இதே கொள்கையை நியாயப்படுத்தவே செய்கின்றன. பாரதீய ஜனதா கட்சியோ, பாகிஸ்தானின் 'இஸ்லாமிய குண்டு'க்கு எதிராக இந்தியா 'சுதேசி குண்டு' தயாரிக்க வலியுறுத்துகிறது. ஜனதா கட்சியோ பாகிஸ்தானின் அணுகுண்டு தயாரிப்பால் நமக்கு பாதுகாப்பின்மை ஏற்பட்டுள்ளது என்கிறது. போலிக் கம்யூனிஸ்டுகள் எப்போதுமே இந்தியாவின் விஸ்தரிப்பு கொள்கைக்கு வக்காலத்து வாங்கியுள்ளனர். ரசியாவுடன் சேர்ந்து கொண்டு 'சமாதான—சிவப்பு குண்டு' தயாரித்தால் வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கத் தயங்க மாட்டார்கள். ஆக, இந்தியா வெளிப்படையாக அணுகுண்டு தயாரித்தால் தேசிய வெறியூட்டடப்பட்டு அது ஜனரஞ்சக ஆதரவைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

'பொஹ்ரான் அணுகுண்டு வெடிப்பினால் நாம் குற்ற உணர்வோடு நடந்துகொள்வது சரியல்ல. உண்மையில் பொஹ்ரான் குண்டு வெடிப்புக்கு முன்னரே பாகிஸ்தான் அணு சோதனைகளைத் தொடங்கி விட்டது' என்று கருத்தரங்கம் நடத்தி அணுசக்தி விஞ்ஞானிகள் சமாதானம் கூறுகின்றனர். 'அணுகுண்டு விவகாரத்தில் நாம் பாகிஸ்தானால் மிரட்டப்படுவதையும், அடிமைகளாவதையும் ஒருபோதும் அனுமதிக்க முடியாது' என்கின்றன ஆளும்வர்க்கப் பத்திரிக்கைகள். பாசிசப் பிரதமர் ராஜீவ் காந்தியே, "நாம் பாகிஸ்தானின் அணுச் சோதனையால் மிரட்டப்படுகிறோம். அதை முறியடிக்க நமது அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்று உறுதி கூறுகிறேன்" என்று ஈராண்டுகளுக்கு முன்பே சவால் விட்டார்.

எனவே இப்போது வெளிப்படையாகவே ஒரிசாவில் பாலியபால் பகுதியில் அணு ஆயுத ஏவுகணை தளம் நிறுவும் திட்டத்தை தீவிரப்படுத்தி வருகிறது இந்திய அரசு.

ரஷியாவிடமிருந்து அணு ஆயுத நீர்மூழ்கி கப்பல் வாங்கியதை அமெரிக்கா பெரிதுபடுத்தாமல்மென்மையாக [illegible], அதே போல,ரீகன் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவிசெய்வதை அறிந்தும்இந்தியா அடக்கி வாசிப்பதைக் கண்டும் அமெரிக்க எடுபிடிகள் ஆர்ப்பரிக்கிறார்கள். இத்தகைய அணுகுமுறை இந்திய—அமெரிக்க உறவை வலுப்படுத்தியுள்ளதாக பீற்றிக் கொள்கிறார்கள். மறுபுறம் ரஷிய அடிவருடிகளோ, அணுஆயுத நீர்மூழ்கிக் கப்பலின் வருகையால் இந்திய—ரஷிய நட்புறவில் புதிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று குதூகலிக்கிறார்கள்.

ஆக, ரஷிய—அமெரிக்க வல்லரசுகளின் ஆசியோடு தெற்காசிய பிராந்திய பேட்டை ரௌடியாக இந்தியா மாறியுள்ளது. நாடு முழுவதும் பத்து கோடிக்கும்



'உற்ற நண்பர்களின்' 'உதவி': ரஷியவல்லரசு இந்தியாவுக்கு கொடுத்துள்ள அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல்.

மேலான மக்கள் பஞ்சத்திலும் பட்டினியிலும் தவித்துக்கொண்டிருக்கும் போது மேலும் 15,000 கோடி ரூபாயை ராணுவத்துக்கு ஒதுக்க ராஜீவ் கும்பல் திட்டமிட்டுள்ளது. ரஷியாவிடமிருந்து 3000 கோடி ரூபாய்க்கு மேலும் நான்கு அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பலை குத்தகைக்கு வாங்கப்போகிறது. இது தவிர நவீன ஜெட்விமான பயிற்சிக்காக ரூ2,000கோடியை ஒதுக்க முடிவாக்யுள்ளது.

மறுபுறம் பாகிஸ்தானும் இந்தியாவைப்போலவே தேசிய வெறியூட்டுவதோடு கூடவே இஸ்லாமிய மதவெறியையும் ஊட்டி தனது அணு ஆயுதக் குவிப்பை நியாயப்படுத்தி வருகிறது. "இந்துக்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் யாவரும் அணுகுண்டைப் பெற்றுள்ளனர். கம்யூனிஸ்டுகள்கூட அணுகுண்டு வைத்துள்ளனர். இஸ்லாமிய சமூகத்தினரிடம்தான் அணுகுண்டு இல்லை. இந்த நிலையை நாம் மாற்றவேண்டும்" என்று வெறியூட்டி வந்தார் தூக்கிலிடப்பட்ட பாகிஸ்தான் அதிபர் பூட்டோ. அதன்பிறகு ஆட்சிக்கு வந்த ஜியா அரசு பூட்டோவின் அணு ஆயுதக் கொள்கையை வெறியோடு நடைமுறைப்படுத்தியது. இந்தியாவின் பகைமையைக் காரணங்காட்டுவதோடு, மேற்கே அண்டை நாடான ஆப்கனில் ரஷியாவின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று கூறி தனது ஆயுதக்குவிப்பை நியாயப்படுத்தியது. இதோடு இஸ்லாமிய உலகின் தலைவனாகும் பேராசை, அதன் மூலம் எண்ணெய் வளமிக்க அரபு நாடுகளின் நட்பைப் பெற்று, அவர்களை பாகிஸ்தானில் மூலதனமிட கவர்ந்திருப்பது என்ற திட்டத்தோடு அணு ஆயுதத் தயாரிப்பில் அமெரிக்க ஆதரவோடு இறங்கியுள்ளது ஜியா அரசு.

"ஒரு அணுகுண்டை தயாரித்து சோதனை வெடிப்பு நடத்த இந்தியாவுக்கு 12 ஆண்டுகள் ஆனது. நாங்கள் ஏழே ஆண்டுகளில் இதை சாதித்துள்ளோம்... எங்கள் நாடு அச்சுறுத்தப்படுவதைத் தடுக்கவே நாங்கள் அணுகுண்டு தயாரித்தோம்" என்று பாகிஸ்தான் கொக்கரிக்கிறது. "கஹுதா அணுஉலையைஇந்தியா தாக்கத் துணிந்தால் அதற்கு



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்காவின் குப்பைத் தொட்டி!

மூன்றாம் உலக நாடுகள் ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக மாற்றப்பட்டதோடு இப்போது குப்பைத் தொட்டியாகவும் மாறிவிட்டது. கடந்த பல்லாண்டுகளாக நஞ்சாகிப் போன கழிவுப் பொருட்களை அமெரிக்கா கப்பல் கப்பலாக மூன்றாம் உலக நாடுகளில் கொண்டுவந்து கொட்டியுள்ளது என்ற அதிர்ச்சியூட்டும் தகவல் சமீபத்தில் வெளிவந்துள்ளது.

அமெரிக்க தனியார் ஆயுதத் தளவாட ஆலைகளிலிருந்தும், மற்றும் பிற ஆலைகளிலிருந்தும் ரசாயனக் கழிவுகள், மருந்துப் பொருட்களின் கழிவுகள், அமிலச் சாம்பல்கள், பாதரசக் கழிவுகள், அணு கழிவுகள் முதலானவை இந்தியா, பிலிப்பைன்ஸ், மெக்சிகோ, ஆப்பிரிக்கா முதலான 35 மூன்றாம் உலக நாடுகளில் கொண்டுவந்து கொட்டப்பட்டுள்ளது. அணுக்கழிவுகளால் ஏற்படும் கதிரியக்கம் மனித இனத்துக்கே ஆபத்தாகும். மற்றபிற கழிவுகளால் நிலத்தடி நீர் நஞ்சாவது, பயிர்கள் சாவியாகுதல், சுற்றுச்சூழல் நஞ்சாகுதல், புதிய தலைமுறையினர் பிறப்புக் கோளாறுகளால் உடல் ஊனமாகுதல், புற்றுநோய் பீடித்தல் முதலான கொடிய பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

அமெரிக்க அணு ஆயுதத் தளவாட ஆலைகளில் ஆண்டுக்கு 400 டன் கழிவு சேர்கிறது. அத்தனையும் இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் ரகசியமாக கொட்டப்பட்டுள்ளது. அல்லது அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களோடு சேர்த்து அனுப்பப்படுகிறது. அல்லது இக்கழிவுகளை பயன்பாட்டுக்கான பொருட்களாக காட்டி மோசடி செய்து, அவற்றை ஏற்றுமதி செய்து அதிலும் கொள்ளையடிக்கிறது. இப்படித்தான், நஞ்சாகிப்போன துத்தநாக கழிவுத்தாள்களை கக்கூசில் பயன்படுத்தும் தாள்கள் என்று ஏய்த்து ஒரு ஆப்பிரிக்க நாட்டுக்கு அமெரிக்கா ஏற்றுமதி செய்துள்ளது. ஏற்கனவே ஐரோப்பிய நாடு நாடுகளிலிருந்து வங்கதேசத்துக்கு உதவியாக அனுப்பப்பட்ட வெண்ணெய் அணுக்கதிரியக்கம் பரவிய நஞ்சாக இருந்தது.

கடன்பட்ட ஏழைநாடுகளுக்கு அணுக்கழிவுகளை ஏற்றுமதி செய்வதோடு, அதிலும் கொள்ளையடிப்பது அமெரிக்காவின் அயோக்கியத்தனம் என்று சர்வதேச சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் குழுவே கடுமையாக கண்டனம் தெரிவித்துள்ளது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு சூரப்புலி பாசிசராஜீவ் கும்பல் இவற்றை அறிந்தும்கூட எதிர்க்களலும்பின்றிக் கிடக்கிறது. ஆயுதபேரத்தில் கொள்ளையடித்ததைப் போல, ஒருவேளை அமெரிக்காவிலிருந்து அணுக்கழிவுகளை இறக்குமதி செய்வதிலும் கமிஷன் அடித்துள்ளனரோ, என்னவோ?

என்ன விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்பது இந்தியாவுக்குத் தெரியும். நாங்கள் அருகிலுள்ள இந்தியாவின் துருவா அணு உலையைத் தாக்கினால் கதிர்யக்கம் பரவி பம்பாய் நகரமே சூன்யமாகிப் போகும்” என்று இப்போது சவால் விடுக்கிறது பாகிஸ்தான் அரசு.

அணுவைப் பிளப்பதற்கான சாதனங்களைப் பெற்றிராத நிலையில் இருந்த பாகிஸ்தான், இப்போது மேற்கத்திய நாடுகளிலிருந்து கடத்தியும் திருடியும் வந்து அணு ஆயுதத் தயாரிப்பில் முன்னேறி விட்டது. யூரேனியத்தை செறிவூட்டும் கஹுடா அணு உலையோடு கூடவே இப்போது கோல்லா எனுமிடத்தில் இரண்டாவது அணு உலையை நிறுவியுள்ளது. கள்ளத்தனமாக அணு ஆயுதத் தயாரிப்பில் இறங்கியுள்ளதைக் கண்டு மேலை நாட்டு பத்திரிக்கைகள் அம்பலப்படுத்தி சாடி புழுங்குகின்றன. பாகிஸ்தான் அரசோ “அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட மாட்டோம் என்றுஒப்பந்தம் போட்ட அமெரிக்க ராணுவக் கூட்டமைப்பு நாடுகளே விதுகளை மீறிக் கொண்டிருக்கும்போது நாங்கள் அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதில் என்னதவறு உள்ளது” என்று எதிர்வாதம் செய்து வாயடைக்கிறது.

இந்தியாவும் பாகிஸ்தானும் சார்க் மாநாட்டில் கை கோர்த்துக் கொண்டு, ‘இந்து மாக்கடல் பிராந்தியத்தை அமைதி மண்டலமாக்க பாடுபடுவோம்’ என்று ஒருபுறம் முழங்கிக் கொண்டே மறுபுறம், அணு ஆயுத போட்டாபோட்டியில் தீவிரமாக இறங்கியுள்ளன. இதன் விளைவாக 1991க்குள் ஹிரோசிமா பேரழிவுக்கு ஒப்பான 15 அணுகுண்டுகளை பாகிஸ்தான் தயாரித்துவிடும்; இந்தியாவோ நூற்றுக்கும் மேலான அணுகுண்டுகளைத் தயாரித்துவிடும். காரணம், இந்தியாவிலுள்ள எல்லா அணு உலைகளும், அணுவைப் பிளப்பதற்கான திறன் கொண்டவை. எதிர்காலத்தில் இந்துமாக்கடல் அணு ஆயுத மண்டலமாக இருக்கப் போவதில் சந்தேகமில்லை.



பாகிஸ்தானில் இஸ்லாமிய அணுகுண்டு தயாரிப்புக்கான கஹுடா அணு உலை.

ஸ்டாக்ஹோம் மாநாட்டில், “அணு ஆயுதங்களை மட்டுமின்றி, எல்லா வகை ரசாயன ஆயுதங்களையும் ஒழிக்க வேண்டும். இதற்காக ஐ.நா. சபை உதவியுடன் சர்வதேச மேற்பார்வைக் குழுவை கட்டியமைக்க வேண்டும்” என்று சமாதானத் தூதுவனாக உபதேசித்த பாசிச ரஜீவ், அண்டை நாடான பாகிஸ்தானுடன் போர் மறுப்பு ஒப்பந்தம் செய்ய மறுக்கிறார். ஜியா அரசு பலமுறை வலியுறுத்திய போதிலும்கூட இந்திய அரசு போர் மறுப்பு ஒப்பந்தத்திற்கு செவி சாய்க்கவேயில்லை. இது தவிர இருநாடுகளும பரஸ்பரம் ஆயுத உற்பத்தியை மேற்பார்வையிடுவது, அணு ஆயுதக் குவிப்பைத் தடுப்பதற்கான ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு இந்தியா பிடிவாதமாக மறுத்துவிட்டது. ‘உலகுக்கு உபதேசிப்பது ஒன்றாகவும், நடைமுறையில் வேறொன்றாகவும் இருப்பது இப்போது பேஷனாகிவிட்டது. இஸ்ரேல், தென்னாப்பிரிக்கா, லிபியாவைப் போலவே விதிகளை மீறி அணு ஆயுதங்களை இந்தியாவும் பாகிஸ்தானும் தயாரிக்கத் தொடங்கிவிட்டன. இனி இரு நாடுகளுக்கிடையே சமாதானம் என்பது குதிரைக் கொம்புதான்’ என்று குட்டி முதலாளித்துவ சமாதானவாதிகளே பரிகசிக்கின்றனர்.

‘எங்களுக்கு முன்பே இந்தியா அணுகுண்டு தயாரிக்கத் தொடங்கிவிட்டது; எனவே இந்தியாதான் அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்திற்கு முன்வர வேண்டும்’ என்று வாதம் செய்கிறது பாகிஸ்தான் அரசு. ‘அப்படிப் பார்த்தால் இந்தியாவுக்கு முன்பே சீனா அணுகுண்டு தயாரித்துள்ளது. எனவே தெற்காசிய பிராந்தியத்தில் அமைதி நிலவவேண்டுமானால் சீனாதான் முன் வர வேண்டும்’ என்று விதண்டாவாதம் செய்கிறது இந்திய அரசு. ஏகாதிபத்திய எடுபிடிகளும், தேசிய வெறியர்களும், மதவெறியர்களும், போர் வெறியர்களுமான இருநாடுகளின் சர்வாதிகாரிகள் உள்ளவரை இந்தியா—பாகிஸ்தானுக்கிடையே சமாதானமும் நட்புறவும் ஒருபோதும் உருவாகப் போவதில்லை. அணு ஆயுதப்போருக்கான அபாயமும் நீக்கிவிடப் போவதுமில்லை.

●பாலன்



படிப்பகம்

www.padippakam.com

# வரலாற்றைப் புரட்டும் குருட்டு சிந்தனையாளர்கள்

பெரியார் வழிதான் மிகச் சரியானது என்று நிருபிக்கவிவேகி என்பவர் சிந்தனையாளன்பத்திரிக்கையில் ஒரு தொடர் கட்டுரை எழுதியுள்ளார். போலிக் கம்யூனிஸ்டுகள் செய்தசில தவறுகளைச்சுட்டிக் காட்டி (அதையும்கூட சரியாகச் சொல்லாமல் பொய்யும் புனைசுருட்டுமாக அவதூறுச் சேற்றைத்தான் வாரியிறைத்துள்ளார்) அந்த மிதப்பில் மார்க்சிய ஆசான்களின் மீதும் அவதூறை வாரியிறைக்கிறார்.

சிறிதும் விவேகமற்ற முறையில் வரலாற்றையே திரித்துப் புரட்டி ஸ்டாலின்மீது வசைபாடியுள்ளார். ஹிட்லர் அரசியல் சக்தியாக இனவெறியை தூண்டி வளர ஆரம்பித்ததிலிருந்து பாசிச அபாயத்தை உலக மக்களுக்கு எடுத்துரைத்து, அதை முறியடிக்க ஐக்கிய முன்னணி கோட்பாட்டை வைத்து போராடியவர்கள் கம்யூனிஸ்டு புரட்சியாளர்கள். அன்றைய சோசலிச சிற்பியான ஸ்டாலின், ஹிட்லருடன் சேர்ந்து போலந்துமீது படை எடுத்து போலந்தை பங்குபோட்டுக் கொண்டதாக, "அதாவது, காம்ரேடு ஸ்டாலினும்ஹிட்ருலம்சேர்ந்து கொண்டு போலந்து நாட்டின்மீது போக்கிரித்தனமாக படையெடுத்துச் சென்று போரிட்டதன் மூலமே இரண்டாவது உலக மகா யுத்தத்தை தொடங்கி வைத்தனர்" என்று கம்யூனிச எதிர்ப்பை வாந்தியெடுத்திருக்கிறார் விவேகி.

அன்னா லூயி ஸ்ட்ராங் என்பவர் எழுதிய 'ஸ்டாலின் சகாப்தம்' என்ற புத்தகத்திலிருந்து போலந்து பற்றியவிசயத்தை சுருக்கமாககீழே தருகிறோம்.

"...அக்டோபர் 1, 1939 அன்று வானொலி உரையில் சர்ச்சில் சொன்னார்; "கிழக்கு போலந்தில் சோவியத் நாட்டினர் நாஜிக்களைத் தடுத்துநிறுத்தியுள்ளனர்; அவர்கள் இதனை நமது கூட்டாளியாக இருந்து செய்ய வேண்டுமென்பதே எனது ஆசை". பெர்னார்ட்ஷா இட்லருக்கு "அவனது முதல்தோல்வியை" கொடுத்த "ஸ்டாலினுக்கு மும்முறை வாழ்த்துக்கள்" என்று லண்டன் டைம்ஸில் எழுதினார். பிரதம மந்திரி சேம்பர்லைனேகூட அக்டோபர் 26 அன்று காமன்ஸ் சபையில் சலிப்புடன் கூறினார், "ஜெர்மனிக்கெதிரான பாதுகாப்பு என்ற முறையில் போலந்தின் ஒரு பகுதியை செஞ்சேனை கைப்பற்றுவது அவசியமாய் இருந்துள்ளது. அந்த நேரத்தில் ருமேனியா வழியாக ஓடிக் கொண்டிருந்த போலந்திய அகதியரசு சில வாரங்கள் கழித்து லண்டனை அடைந்தது; அது, அந்த சோவியத் படையெடுப்பை போர்ச் செயலென்று ஒருக்காலும் அறிவிக்கத் துணியவில்லை."

மேலும் எழுதும்போது, அந்த போலந்து மக்கள் செம்படையினரை வரவேற்றது, பெண்கள் ருஷ்ய டாங்கிகளுக்கு மாலை அணிவித்தது, ஜெர்மனியை எதிர்த்து போரிட்டு வந்த லிவோவ் காவற்படையின் போலந்திய தளகர்த்தர் செம்படையிடம் சரணடைந்தது, பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளனைத்தும் செம்படையின் செயல் தமக்கு பாதுகாப்பளிக்கிறது என வாழ்த்தி வரவேற்றது, இறுதியாக ஹிட்லர் ரசியாமீது படையெடுத்த போது செம்படையின் இதுபோன்ற செயல்கள் தனது முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தியதாக பட்டியலிட்டது என இன்னும் ஆழமாக இரண்டாம் உலகப்போர் சம்பவங்களை விவரிக்கிறார்.

இவை எல்லாம் சோவியத்தை, ஸ்டாலினின் செயல்களை தக்க நேரத்தில் எடுத்த பாதுகாப்பு நடவடிக்கை என்பதை உறுதிப்படுத்துவதைத் தெளிவாகக் காணமுடியும்.

இரண்டாம்உலகப்போருக்கு காரணமே ஹிட்லரும் ஸ்டாலினும் தான்என்று உலக மகா பொய்யைச் சொல்லி (அமெரிக்களடுபிடிகள்கூட அப்படிச் சொல்லவில்லை) நம்பச் சொல்லும் சிந்தனையாளனை, விவேகியை உலக வரலாறுதெரிந்தவர்கள் எள்ளிநகையாடுவார்கள்.

அமைப்புச் செய்தி:



# காலனி வீடுகள் கட்டித்தரக் கோரி ஆரியப்பட்டி கிராம மக்களின் ஆர்ப்பாட்டம்!



ஆரியப்பட்டி கிராம ஆதிதிராவிடர்கள் காலனி வீடு கேட்டு, பிற்பட்டோர் நல மேம்பாட்டு அலுவலகத்தில் மனு செய்து கடந்த 30 வருடங்களாக அலைந்து வருகிறார்கள்.

போலிக் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட வேறு எந்த ஓட்டுப் பொறுக்கி கட்சியும் இந்தப் பிரச்சினையில் தலையிட முன்வரவில்லை. உள்ளூர் பணக்கார விவசாயிகளால் தாக்கப்படுவோம் என்று பயந்து சொந்தநலனை பிரதானப்படுத்தி சமரசமாகப் போகின்றன. இந்நிலையில், விவசாயிகள் விடுதலை முன்னணிதலையிட்ட பிறகு, மதுரையில் உள்ள தனிக்கலெக்டர் ஊரணி புறம்போக்கை நத்தமாக மாற்றி பட்டா வழங்க உசிலம்பட்டி தாசில்தாருக்கு உத்தரவிட்டார். தாசில்தார் நிலச் சொந்தக்காரர்களிடம் லஞ்சம்வாங்கிக் கொண்டு விவகாரத்தை இப்போது கோர்ட்டுக்கு அனுப்பி விட்டார்.

ஆரியப்பட்டி ஆதிதிராவிட மக்களுக்கு உடனே வீடு கட்டித் தரக் கோரியும், நிலச் சொந்தக்காரர்களுக்குத் துணை போகும் அதிகார வர்க்கத்தின் ஊழலை அம்பலப்படுத்தியும் 11.1.88 அன்று ஆரியப்பட்டி கிராம ஆதிதிராவிட மக்கள் சுமார் 85 பேர் வி.வி.மு தோழர் இராமசாமி தலைமையில் உசிலம்பட்டி ஆர்டிஓ அலுவலகம் முன்பு எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள்.

எம்எல்ஏ எம்.பிகளின் போலி வாக்குறுதிகளை அம்பலப்படுத்தியும், அதிகார வர்க்கம் பணக்கார கூட்டத்திற்கு சேவை செய்வதை தோலுரித்துக் காட்டியும், விண்ணதிர தோழர்கள் முழங்கினார்கள். இறுதியில், தோழர் இராமசாமியும், மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர் பாணனும் அனைத்து அதிகார மட்டங்களுக்குத் தேர்ந்தெடுக்கவும் திருப்பியழைக்கவும் உரிமையுள்ள புதிய ஜனநாயகப் புரட்சியே சரியான தீர்வாகும் என்று விளக்கிப் பேசினர். ஆரியப்பட்டி ஆதி திராவிட மக்கள் மட்டுமின்றி சுற்று வட்டார மக்கள் மத்தியிலும் இந்நிகழ்ச்சி சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி
உசிலை வட்டம்



படிப்பகம்

www.padippakam.com




# "ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்"

தலைவர்களின் துரோகங்களும் புரட்சிகர அணிகளின் தியாகங்களும் நிறைந்தது—இந்தியக் கம்யூனிச இயக்க வரலாறு.

இதிலே டாங்கேயா, நம்பூதிரிபாடா, ராமமூர்த்தியா? ரணதிவேவா, ராஜேஸ்வரராவா, ஜோதிபாசுவா? பசவபுன்னையாவா, கல்யாணசுந்தரமா, அரிகிஷன்சிங் சுர்ஜித்தா? என்று நீண்டுகொண்டே போகும் இந்தத் துரோகிகளின் பட்டியலில் யாருக்கு முதலிடம்?

முடிவு செய்ய முடியாத அளவுக்கு ஒருவரை ஒருவர் விஞ்சி நின்ற சமயத்தில் திருவாளர் பி. ராமமூர்த்தியின் வாக்குமூலம் ஒன்று வெளி வந்தது. "ஆரிய மாயையா? திராவிட மாயையா? விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்" என்கிற நூலை எழுதி வெளியிட்டார். கம்யூனிசப் போர்வையில் ஒளிந்து கொண்டிருந்த ராமமூர்த்தி அடிப்படையில் தான் ஒரு காந்தீய—காங்கிரசு—பார்ப்பனீயவாதி என்பதை உறுதிப்படுத்துவதாகவே, ஒப்புக் கொள்வதாகவே அந்த நூல் அமைந்திருந்தது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அதன் அடிவருடிகளான தரகு அதிகார வர்க்க முதலாளிகள்— நிலப்பிரபுக்களுக்கும் ஊழியஞ் செய்வதிலும் அதனால் அரசியல் ஆதாயம் அடைவதிலும் நீதிக் கட்சியுடன் பார்ப்பனீய ஆதிக்கத்திலிருந்த காங்கிரசுக் கட்சி நடத்திய போட்டியையே தேசிய விடுதலைப் போராக ராமமூர்த்தி அந்த நூலில் சித்தரிக்கிறார். நீதிக் கட்சியின் ஏகாதிபத்திய சேவைகளை வரிசைப்படுத்திச் சாடும் ராமமூர்த்தி காந்தீய—காங்கிரசின் துரோகங்களையெல்லாம் "இயல்பான வர்க்கத் தன்மைகள்" என்று மழுப்புகிறார்; வர்ணாசிரமப் பார்ப்பனீயச் செயல்களையெல்லாம் ஏதோ ஒரு "சிலரது வைதீகப் பித்து" என்று மூடி மறைக்கிறார். "சர்வ கட்சியினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கைதேர்ந்த அரசியல் தரகர்தான் ராமமூர்த்தி" என்பதை நிரூபிக்கும் வகையில் ஏராளமான சாட்சியங்கள் கொடுக்கிறார்.

ராமமூர்த்தியின் காந்தீய—காங்கிரசு—பார்ப்பனீய வாதங்களையே — வாக்குமூலங்களையே வாய்ப்பாகக் கொண்டு திராவிடர் கழகத் தலைவர் வீரமணி நீதிக் கட்சியின் ஏகாதிபத்தியச் சேவைகளை நியாயப்படுத்தும் விமர்சன நூல் ஒன்றை எழுதினார். சென்ற ஆண்டு டிசம்பரில் ராமமூர்த்தி இறந்து போனார். அவரது சாவுக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பாக அவரது நூல் ஆங்கிலத்தில் வெளிவந்தது. ராமமூர்த்தியின் நூல் வெளிவந்து நான்கு ஆண்டுகளாகிவிட்டன. அவர் உயிருடன் இருந்த போதே விமர்சிப்பதும், பதிலளிக்க வாய்ப்பளிப்பதும்தான் நியாயமானது. ஆனால் சிறிய இயக்கத்துக்குரிய வரம்புகள் காரணமாக அப்போது அது சாத்தியமில்லாமல் போய்விட்டது.

இருப்பினும் கம்யூனிச இயக்கத்துக்குள் ராமமூர்த்தி போன்றவர்களின் துரோகத்தனத்துக்கு ஒரு வரலாறு இருக்கிறது அதற்கு வாரிசுகளும் இருக்கிறார்கள். குறிப்பாக ராமமூர்த்தியின் நூல் அவரது காந்தீய— காங்கிரசு— பார்ப்பனீய வாரிசுகளுக்கு அவர் கையளித்த உயில்—ஒரு கம்யூனிச துரோகியின் மரண சாசனம்! அதை வரித்துக் கொள்பவர்கள் அதன் மீதான விமர்சனங்களுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள். எனவே தாமதமானாலும் தவிர்க்கக் கூடாத காரணங்களால் அதை விமர்சிக்கிறோம். கம்யூனிச துரோகிகளை மட்டுமல்ல, நீதிக் கட்சியின் வாரிசுகளையும் இனங்கண்டு கொள்வதற்கு இது அவசியமாக உள்ளது.

## இரண்டு துரோகக் கும்பல்கள்

ஆங்கிலேய காலனிய ஆதிக்கத்தின் கீழ் நிலவிய தென்னிந்திய அரசியல் போக்குகள் பற்றி பல ஆங்கிலேய வரலாற்று—அரசியல் ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்துள்ளனர். அவர்கள் தமது ஆராய்ச்சி முடிவுகளை நூல்களாக வெளியிட்டுள்ளனர். அவற்றுள் முக்கியமானவை டேவிட் வாஷ்புருக் எழுதிய "சென்னை அரசியல் (1870—1920)" கிறிஸ்டோபர் ஜான்பேக்கர் எழுதிய 'தென்னிந்திய அரசியல் (1920—1937)' இர்சிக் எழுதிய 'தென்னிந்தியாவின் அரசியலும் சமூக முரண்பாடுகளும்' ஆகியவை முக்கியமானவை. இவை தவிர தென்னிந்திய அரசியல் சமூக நிலைமைகள் பற்றி இவர்கள் பல ஆய்வுகள் செய்து வெளியிட்டுள்ளனர்.

வாஷ்புருக், பேக்கர், இர்சிக் ஆகிய மூன்று ஆய்வாளர்கள் ஏராளமான ஆதாரங்களை எடுத்தாண்டிருக்கிறார்கள். அரசு ஆவணங்கள், குறிப்புகள், நாடாளுமன்ற—சட்டமன்ற அமைச்சரவை அதிகாரிகள் கூட்டக் குறிப்புகள் தாக்கீதுகள், காங்கிரசு, நீதிக்கட்சி உட்பட கட்சிகளின் ஆவணங்கள் செய்திதாள்கள், பத்திரிக்கைகள் வெளிவந்த நூல்கள், கட்டுரைகள் பிரசுரங்கள், அரசு மற்றும் தனி நபர் கடிதங்கள், குறிப்புகள் ஆகிய அனைத்தையும் அலசித் தமது ஆய்வுக்குரிய ஆதாரங்களைக் கொடுத்துள்ளார்கள்.

இந்தியாவில் காலனிய ஆதிக்கத்தை நிறுவிய கிழக்கிந்திய கம்பெனியின் ஆரம்பகால ஆட்சி குறைகளை நீக்கவும், நேரடியாக ஆங்கிலேயப் பேரரசின் ஆட்சியை நிறுவி உறுதிப் படுத்தவும் விரிவு படுத்தவும் காலனிவாதிகள் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். 1870—80களில் மயோ—ரிப்பன் கொண்டு வந்த மாநில—உள்ளுராட்சி நிர்வாக அமைப்புகள் 1910இல் கொண்டு வரப்பட்ட வைஸ்ராய்—கவர்னரின் ஆலோசனை நிர்வாகக் கவுன்சில் சபைகள், 1920இல் மாண்டேகு-சேம்ஸ்போர்டு கொண்டு வந்த இரட்டை ஆட்சி முறை ஆகிய காலனியவாதிகள் ஆரம்பத்தில் மேற்கொண்ட சீர்திருத்தங்கள். இவற்றையும், இவற்றின் விளைவுகளையும், போக்குகளையும் ஆய்வு செய்வதே அந்த ஆங்கிலேய ஆராய்ச்சியாளர்களின் நோக்கமாக இருந்தது. காலனிய ஆட்சியாளர்களின் சீர்திருத்தங்களை ஏற்றுக் கொண்டு அவர்களுக்குச் சேவை செய்வதிலும், அரசியல் ஆதாயம் தேடிக் கொள்வதிலும் நீதிக்கட்சி மற்றும் காங்கிரசின் பல்வேறு சுயநல சாதியக் குழுக்கள் எப்படிப்பட்ட போட்டிகளில் ஈடுபட்டிருந்தன என்பதை மிகவும் விரிவாக அந்த ஆராய்ச்சியாளர்கள் தொகுத்திருக்கிறார்கள்.

நிதி மற்றும் நிர்வாக நிர்ப்பந்தங்கள் காரணமாக சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே அதிக



படிப்பகம்

www.padippakam.com

ரத்தை மையப்படுத்தவும் அதிகார வர்க்க எந்திரத்தைப் பலப்படுத்தி விரிவுபடுத்தவுமான நடவடிக்கைகளில் காலனியவாதிகள் இறங்கினர். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் மிட்டா மிராசுகள், ஜமீன்—நிலப்பிரபுக்களிடம் இருந்த அரசு அதிகாரங்களைப் பறித்து அதிகார வர்க்கத்திடம் ஒப்படைக்க துவங்கினர்; மாவட்ட—மாநிலத் தலைநகர்கள் அதிகார மையங்களாயின. பிறகு வருவாய்த் துறையின் இறுதி முடிவெடுக்கும் அதிகாரங்கள் மாவட்டாட்சி அலுவலகங்களிலிருந்து சென்னைக் கோட்டைக்கு, வலுவடைந்த செயலகத்துக்கு மாறியது. அதிகார வர்க்கத்துக்குள் நுழைவதற்கான வழி என்கிற முறையில் சென்னை பல்கலைக்கழக ஆட்சிக் குழுவும் செயலகத்தின் கல்வித் துறையும் முக்கியத்துவம் பெற்றன.

அதிகார வர்க்க எந்திரத்தின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்காக உள்ளூர்—மாவட்ட அரசியல்வாதிகள் சென்னைக்குப் போக வேண்டி வந்தது; நீர்ப்பாசனம், மராமத்து மற்றும் பண்ணை விவசாயிகள் பற்றிய பல விவகாரங்களுக்கு அவர்கள் போனார்கள். இந்தியர்களுக்குக் கூடுதலான அதிகாரம் தரப்பட வேண்டுமென்று காங்கிரசும் கோரி வந்தது. கவர்னரின் நிர்வாக ஆலோசனைக் குழுவிலும், அரசுச் செயலகத்திலும் இந்தியர்களின் பங்கேற்பு அதிகரித்து வந்தது. பெரும் மிட்டா மிராசுகள், ஜமீன் நிலப்பிரபுக்கள், கோவில்கள்—அறக்கட்டளைகளின் நிர்வாகிகள், பெரும் வியாபாரிகள் கல்வி நிறுவனங்களின் இயக்குனர்கள் போன்றவர்கள் இதற்கு முன்பு மாவட்ட அளவிலான செல்வாக்கோடு திறைவுற்றிருந்தார்கள். நிர்வாக மாற்றம் காரணமாக இப்போது சென்னை செயின் ஜார்ஜ் கோட்டைச் சுவர்களுக்குள் இருந்த அதிகார பீடத்திடம் செல்வாக்குப் பெற வேண்டி வந்தது. அரசாங்கத்தில் நிர்பந்தத்தை உருவாக்கித் தமது நலன்களைச் சாதித்துக் கொள்ள வேண்டி வந்தது.

“நூற்றாண்டின் திருப்பத்தில் பல உள்ளூர் அரசியல்வாதிகள் சென்னை நகருக்கு மூட்டை கட்டினார்கள். உள்ளூர் நலன்களுக்கு உதவும் பொருட்டு அதிகாரக் குவிமையத்துக்கு நெருக்கமாக அவர்கள் போக வேண்டி வந்தது. நிர்வாக மாற்றம் இறுதியாக மாநிலத்தின் அரசியல் வாழ்க்கையை மாற்றியமைக்கும் வாய்ப்பேற்படுத்தியது” (பேக்கர் பக். 10)

அதே சமயம், மாநிலத் தலைநகரில் புதிதாகத் தோன்றிய முக்கியமான அரசு நிறுவனங்களுக்கும் அவற்றில் செல்வாக்குச் செலுத்தி ஆதாயம் அடைய விரும்பிய நபர்களுக்கும் இடையில் அரசியல் தரகு வேலை பார்க்கும் ஒரு பிரபலமான கும்பல் சென்னையில் தோன்றியது. அதன் கருவாக அமைந்தவர்கள் மாநிலத்திலேயே பிரபலமான வக்கீல்களும் நிர்வாகிகளுமாவர். சாராம்சத்தில் அதிகார வர்க்கத் தன்மையுடைய ஒரு அரசியல் அதிகாரத்தை அடைவதற்கும் செல்வாக்குச் செலுத்துவதற்குமான விதிகளை நன்கு புரிந்திருந்தவர்கள்; முக்கியமாகத் தமது ஆங்கில மொழி அறிவைக் கொண்டு அதிகாரத் தாழ்வாரங்களில் தமது வாடிக்கையாளர்களின் நலன்களை ஈடேற்றுவதில் திறமை வாய்ந்தவர்கள். பணக்காரர்களும் உயர் கல்வி கற்றவர்களும், மாநிலம் முழுவதும் சட்டம் மற்றும் நிர்வாக சமூகத்தில் விரிவான தமது குடும்ப உறவுகளும் கொண்டிருந்தவர்கள். அவர்களின் ‘அறிவும்’ விரிவான தொடர்புகளும் காரணமாக அதிகார வர்க்கத்துக்கும் அவர்களின் ஆலோசனைகளும் உதவிகளும் தேவையாயிருந்தன.



மைலாப்பூர்காரர்கள் என்றழைக்கப்பட்ட இந்தச் சிறுகும்பலின் செல்வாக்கு 1910க்குள் அதீதமாக வளர்ந்து விட்டது. அவர்களில் சிலர் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகளானார்கள். சிலர் சட்டசபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்கள்.

சிலர் அரசாங்க கமிஷன்களில் பங்கேற்றார்கள். 1910இல் கவர்னரின் நிர்வாகச் கவுன்சிலில் ஒரு இந்தியர் சேர்க்கப்பட்டதிலிருந்து தவறாது தொடர்ந்து இந்தக் கும்பலில் ஒருவர் இடம் பெற்றிருந்தார். இந்த வாய்ப்பான இடங்களில் இருந்து கொண்டு நகரின் பலமுக்கியப் பதவிகளை அவர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். சென்னை மாநகராட்சியில் முக்கியமானதொரு அணியாக இருந்த உள்ளூர் வியாபாரிகள் மற்றும் காண்டிராக்டர்களின் இடத்தைக் கைப்பற்றத் தொடங்கினார்கள். சென்னைத் துறைமுக வாரியத்தில் காலூன்றினார்கள். நகரிலேயே பணக்கார நிறுவனமான பச்சையப்பா அறக்கட்டளை நிர்வாகத்தைக் கைப்பற்றினார்கள். கவர்னரின் நிர்வாகக் கவுன்சிலில் அங்கம் வகித்த மைலாப்பூர்காரருக்கு உள்ளூராட்சித் துறை பொறுப்பிருந்ததால் மாவட்டங்களுக்கும் அவர்களது அதிகார வலைப்பின்னல் விரிந்தது. “தர்மரக்ஷண சபா” என்கிற கோவில் சீர்திருத்த அமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு மாநிலத்தின் பணக்காரக் கோவில் நிர்வாகங்களிலெல்லாம் இந்த மைலாப்பூர் கும்பலின் ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள்.

மைலாப்பூர் கும்பல் என்பது உண்மையில் ஒரு பார்ப்பனக் கும்பல். அதிலே முக்கியமானவை வேம்பாக்கம் அய்யங்கார்கள் மற்றும் சேத்துப்பட்டு அய்யர்களின் இரு குடும்பங்கள். நீதிபதியின் மகனும் சென்னையிலேயே பிரபலமான சிவில் வக்கீலுமான சேத்துப்பட்டு பட்டாபிராம ராமசாமி அய்யர்தான் மைலாப்பூர் கும்பலின் பெருந்தலைவர்

மைலாப்பூர் கும்பலின் மற்றொரு தலைவர் எஸ். சீனிவாச அய்யங்கார். பிரபல வக்கீலின் மருமகனும் விரைவிலேயே பெரும் பணம் குவித்து மதுரை மாவட்டத்தில் ஒரு ஜமீன் உரிமையை விலைக்கு வாங்கியவருமாவார். அன்னிபெசண்ட் தலைமையான ஆபாச—வக்கிர கும்பலின் தியாசபிகல் சொசைட்டி மூலம் பார்ப்பனிய மதஆதிக்கத்தை நிறுவினர். அதை அடிப்படையாகக் கொண்டு அன்னிபெசன்டின் ஹோம்ரூல் லீக்கைப் பயன்படுத்திக் கொண்டு

## மயிலாப்பூர்க் கும்பல்

பட்டாபிராம ராமசாமி அய்யர்தான் மைலாப்பூர் கும்பலின் பெருந்தலைவர் 1917—18இல் காங்கிரசு பொதுச் செயலாளராகவும், மாநகராட்சி உறுப்பினராகவும் இருந்தார்; 1919இல் இங்கிலாந்துக்கு காங்கிரசு மிதவாதப்பிரதிநிதியாகப் போனார்; 1920இல் மாநில சட்டசபை உறுப்பினரானார்; 1920—23இல் அட்வகேட்—ஜெனரல், 1923—28இல் கவர்னரின் நிர்வாகக் கவுன்சில் சட்ட உறுப்பினர்; 1926—27இல் சர்வதேசங்களின் கூட்டமைப்பில் இந்தியப் பிரதிநிதி; 1930இல் இந்திய அரசாங்கத்தின் சட்ட மற்றும் வர்த்தக உறுப்பினர் (அமைச்சர்) 1936இல் திருவாங்கூர் திவான் ஆனார். மற்றொருதலைவர் எஸ். சீனிவாச அய்யங்கார். 1916—20இல் அட்வகேட் ஜெனரல். 1920இல் சட்டசபை உறுப்பினர்; 1923—27 சுயராஜ்யக் கட்சித் தலைவர்; 1925இல் சென்னை மாநகராட்சித் தலைவர். 1926இல் மத்திய சட்டசபை உறுப்பினர்; 1927ல் காங்கிரசுத் தலைவர்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த மைலாப்பூர் கும்பல் தனது அரசியல் செல்வாக்கை நிறுவியது இவற்றைக் கொண்டு காலனியவாதிகளிடமிருந்து அதிகாரப் பகிர்வைப் பெறுவதில் வெற்றி பெற்றார்கள். மாநிலக் காங்கிரசையும் தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தனர். 1910க்கு முன்பு நடந்த காங்கிரசின்'மிதவாதிகளுக்கும்' 'தீவிரவாதிகளுக்கும்' இடையில் நடந்த மோதலில் இந்த மைலாப்பூர் கும்பல் மிதவாதிகளின் பக்கம் நின்றது. 1907 சூரத் காங்கிரசு பிளவுக்குப் பிறகு மாநில காங்கிரசிலிருந்து தீவிரவாதிகளை விலக்கி வைத்தார்கள்.

மைலாப்பூர் கும்பலின் ஆதிக்கத்தைக் கண்டு வேறு இரு கும்பல்கள் பொறாமையும் வெறுப்பும் அடைந்திருந்தன. அவையும் மைலாப்பூர் கும்பலைப் போன்ற தொழில் மற்றும் பிற பின்னணியுடையவை; ஆனாலும் அரசாங்க நம்பிக்கையும், அரசியல் செல்வாக்கும் பெற முடியாமற் போய் விட்டவை. ஒன்று இந்து பத்திரிக்கை முதலாளி கஸ்தூரி ரெங்க அய்யங்கார் தலைமையிலிருந்த எழும்பூர் கும்பல். மற்றொன்று வசதியான வக்கீலும் சேலம் நகராட்சி முன்னாள் தலைவருமான ராஜகோபாலாச்சாரி தலைமையிலிருந்த திருச்சி டிஎஸ் எஸ் ராஜன், குளித்தலை சேது ரத்தின ஐயர் போன்றவர்அடங்கிய மாவட்டங்களைச் சேர்ந்த கும்பல். இவை இரண்டுமே பார்ப்பனக் கும்பல்கள். மைலாப்பூர் கும்பலுக்கு எதிராக இவை இரண்டும் ஒன்று சேர்ந்து காங்கிரசின் 'தீவிரவாத'ப் பிரிவை ஆதரித்து மாநில அமைப்பின் தலைமையைக் கைப்பற்ற முயன்றார்கள். இந்தஎழும்பூர் கும்பல்தான் தன்னைத் 'தேசியவாதிகள்' என்றழைத்துக் கொண்டது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அதன் அடிவருடிகளான தரகு அதிகார வர்க்க முதலாளிகள்—நிலப்பிரபுக்களுக்கு ஊழியஞ் செய்வதிலும் அதனால் அரசியல் ஆதாயம் அடைவதிலும் நீதிக்கட்சியுடன் பார்ப்பனிய ஆதிக்கத்திலிருந்த காங்கிரசுக் கட்சி நடத்திய போட்டியையே தேசிய விடுதலைப் போராக திரு. ராமமூர்த்தி தமது நூலில் சித்தரிக்கிறார்.

மைலாப்பூர் கும்பலின் பரந்து விரிந்த செல்வாக்குக்கு ஈடு கொடுக்க முடியாமற்போன எழும்பூர் கும்பல் அதைச் சரிக்கட்டுவதற்காக "தீவிரவாத" அரசியல் கொள்கையும், பல "போராட்டங்களை"யும் முன்வைத்தது. 1930களின் மத்தியில் மைலாப்பூர் கும்பலின் எஸ்.சீனிவாச அய்யங்கார் தலைமையை மைலாப்பூர்கும்பலும், பிறகு இதன் ராஜகோபாலாச்சாரியின் தலைமையை மைலாப்பூர் கும்பலும் ஏற்றுக் கொண்டதன் மூலம் இரு பார்ப்பனக் கும்பல்களுக்கிடையே "ஒருவகையான" சமரசம் ஏற்பட்டது.

மைலாப்பூர் கும்பலுக்கு அதன் பாணியிலேயே எதிர்த்துப் போட்டியாகக் கிளம்பியதுதான் நீதிக்கட்சி. அதாவது 1916—20இல் கூடுதலான அதிகாரப் பங்குகோரி காங்கிரசு மற்றும் ஹோம்ரூல் லீக் இயக்கங்களை ஒரு தந்திரமாக மைலாப்பூர் கும்பல் மேற்கொண்டது. இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு காலனிய அரசாங்கத்தின் அந்தப்புரத்துக்குள் நுழைந்து மைலாப்பூர் கும்பலுக்கு மாற்றான விசுவாசிகளாகத் தம்மை ஏற்றுக் கொள்ளும்படி மன்றாடியது நீதிக் கட்சிக் கும்பல். இதுமேல் சாதியைச் சேர்ந்த நகர வியாபாரிகள், அரசியல்வாதிகள், மருத்துவர், வக்கீல் போன்ற தொழில்காரர்களின் கலவையான கும்பல். பெரும்நெசவு முதலாளியும் வியாபாரியுமானபிட்டி தியாகராஜ செட்டியார் தலைமையில் பத்திரிக்கையாளரும் மருத்துவருமான டி.எம்.நாயர், நிலப்பிரபுவும் வக்கீலுமான ஆர்க்காடு ராமசாமி முதலியார்,கோதாவரிமாவட்ட நிலப்பிரபு மாடிரெட்டி வெங்கட ரத்தினம் ஆகியோர் இந்தக் கும்பலின் ஆரம்ப கர்த்தார்கள். விரைவிலேயே பெரும்பண்ணை நிலப்பிரபுக்களான பித்தாபுரம், ராமநாதபுரம், பொப்பிலி, காலகஸ்தி அரச குடும்பத்தினர் இணைந்தனர்.

மைலாப்பூர் பார்ப்பணக் கும்பலைப் போன்றதொரு கட்டுமானமும், தொடர்பு வலைப் பின்னலும், அரசியல் நோக்கமும் கொண்டதுதான் நீதிக் கட்சி கும்பல். ஆங்கிலேய காலனிய அரசின் கடைக்கண் பார்வைபெறவும், புதிதாகப் பகிர்ந்தளிக்கப்படவிருந்த அதிகாரத்தில் ஆதாயம் தேடவும் விரும்பியது. ஆனால் பார்ப்பனர்களின் ஆதிக்கத்துக்கு எதிரான திராவிடர்களின் வகுப்புரிமை பேரியக்கமாக, வீரமணி போன்றோர் இன்னமும் சித்தரித்து வருகின்றனர்.

ஒரு காலத்தில்தமது ஏஜெண்டுகளாக இருந்த மைலாப்பூர் பார்ப்பனக் கும்பல் பல்கலைக் கழகம், பச்சையப்பா அறக்கட்டளை, மாநகராட்சி, கவர்னரின் நிர்வாக ஆலோசனைக்குழு, அரசு தலைமைச் செயலகம், உயர்நீதிமன்றம் ஆகியவற்றில்ஏகபோகஅதிகாரம்பெற்றிருந்ததைக்கண்டு இவர்கள்பொறாமையும்,வெறுப்பும் உற்றிருந்தனர். இவர்களின் சொந்தச் சொத்தாக மதித்து அனுபவித்து வந்த கோவில் நிர்வாகத்தில் 'தர்ம ரக்ஷன சபை' என்கிற பெயரில் மைலாப்பூர் கும்பல் ஆதிக்கத்தை நிறுவியது, மேலும் ஆத்திரத்தைத் தூண்டியது. மாவட்ட—வட்ட நிர்வாகங்களிலும் மைலாப்பூர்கும்பலின் அதிகாரம் பரவத் தொடங்கியது.

இதனால் வெறுப்படைந்திருந்த பலவேறு மேல்சாதி மிட்டா—மிராசுகள், ஜமீன்—நிலப்பிரபுக்கள், பெரும் வியாபாரிகள்—மருத்துவர், வக்கீல் போன்ற தொழில்காரர்கள் பார்ப்பனர் அல்லாதார் சமூகம் என்கிற அடிப்படையில் ஒன்று சேர்ந்தனர்.

"தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்" என்றழைத்துக் கொண்ட இந்த மேல்சாதி மேட்டுக்குடிக் கும்பல் 1916 இறுதியில் பார்ப்பனரல்லாதார் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. மக்கள் தொகையில் 2 சதவிகிதத்தினரான பார்ப்பனர்கள் பல்கலைக்கழகம், உயர்நீதிமன்றம், மாநகராட்சி, கோவில் நிர்வாகம், அரசு பதவிகள் ஆகியவற்றோடு காங்கிரசிலும் எந்தஅளவு ஆதிக்கம் வகிக்கின்றனர் என்கிற புள்ளிவிவரங்களைக் கொடுத்தது. பார்ப்பனர்களின் பரம்பரை "கல்விவசதிகள்" "அறிவுத்திறமைகள்"தான் இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டியது. பார்ப்பனக் காங்கிரசும், பார்ப்பனஅரசு ஊழியர்களும்தான்ஹோம்ரூல் இயக்கத்துக்குக் காரணம் என்றும் ஆங்கிலேய ஆட்சிக்குதாம் விசுவாசமாக இருப்பதாகவும் நீதிக் கட்சி அறிக்கை கூறியது.

ஜஸ்டிஸ்(நீதி), திராவிடன், ஆந்திர பிரகாசிகா ஆகிய பத்திரிக்கைகள் மூலம் சாதி—சமூக அடிப்படையிலான வாதிப்பிரதிவாதங்களை நடத்தியது. பார்ப்பனர்களுக்கும் அல்லாதார்க்கும் இடையிலான ஒரு அடிப்படை அரசியல் முரண்பாடு உள்ளது; பார்ப்பனரல்லாதார் சமூக முன்னேற்றமும் அரசியல் அதிகாரமும் அடைவதற்காக அணி திரள வேண்டும் என்றும் இந்தப் பத்திரிக்கைகள் பிரச்சாரம் செய்தன. கல்வியிலும் அரசு பதவிகளிலும்,அரசியலிலும் பார்ப்பனர் அல்லாதாருக்கு சிறப்பு சலுகைகள் கோரின.



படிப்பகம்

www.padippakam.com



மார்க்சிஸ்டு கட்சி தலைவர்களின் அணிவரிசை : காங்கிரசுடன் ஐக்கிய பேரம் பேசியதால் இந்த வரிசையிலிருந்து வெளியே தள்ளப்பட்டார் ராமமூர்த்தி.

கல்வி கற்று அரசு பதவிகளுக்காக வாய்ப்புத் தேடிக் கொண்டு பிள்ளைமார், முதலியார், நாயுடு, செட்டியார், வேளாளர் போன்ற பார்ப்பனரல்லாத மேல் சாதி குடும்பங்கள் மத்தியில் நீதிகட்சிப் பிரச்சாரங்கள் எடுபட்டன. அதிகார எந்திரத்தின் சகல மட்டங்களிலும் இருந்து கொண்டு பார்ப்பன அகங்காரத்தைக் காட்டி வந்ததால் வெறுப்படைந்திருந்த பலரும் வரவேற்றனர். குறிப்பாக அரசு வேலைகளுக்கு பார்ப்பனர்கள் மட்டுமே திறமை வாய்ந்தவர்கள், அரசின் தனிச்சிறப்பான "கவனத்துக்கு" பார்ப்பனர்கள் மட்டுமே தகுதியானவர்கள் என்று வெளிப்படையாகவே பல பார்ப்பன அதிகாரிகள் அப்போது வாதிட்டு வந்தனர். பல்வேறு காரணங்களுக்காகப் பார்ப்பன எதிர்ப்பு எடுபட்டது.

உதாரணமாக திருச்சி—தஞ்சை—நெல்லை மாவட்டங்களில் பார்ப்பன நிலப்பிரபுக்களின்கீழ் ஏராளமான குத்தகை விவசாயிகள் சுரண்டப்பட்டு வந்தனர். நெல்லையில் பார்ப்பனரது மத—கல்வி விவகாரங்களில் பிள்ளைமார்கள் பார்ப்பனர்களுடன் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். கிருஷ்ணா மாவட்டத்தில் சமஸ்கிருதம் படிப்பதற்கான தீவிர முயற்சியில் பார்ப்பனரல்லாதார் ஈடுபட்டிருந்தனர். ஆந்திராவின் மற்ற மாவட்டங்களில் பார்ப்பனரல்லாதார்சமஸ்கிருதமும்வேதமும்படிப்பதற்கு எதிர்ப்பில்லை எனினும் கிருஷ்ணாவில் பார்ப்பனப் பண்டிதர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்து, அதிகாரத்தையும் பதவிகளையும் பகிர்ந்துகொள்வதற்கான போட்டியாகத்தான் பார்ப்பன எதிர்ப்பு என்கிற முழக்கத்தை நீதிக்கட்சி முன்வைத்ததே ஒழிய மற்ற சமூக, கலாச்சார பொருளாதாரக் காரணங்கள் எதுவுமில்லை. திராவிட இயக்கத்தினர் இன்று உரிமை பாராட்டிக் கொள்வதைப்போல பார்ப்பனரல்லாத சகல பகுதி மக்களின் நலன்களுக்காக நீதிக்கட்சி ஒரு போதும் நின்றதே இல்லை. மிட்டா—மிராசுகளும் ஜமீன்—நிலப்பிரபுக்களும் பெரும் வியாபாரிகளுமான நீதிக் கட்சியினர் தமக்குக் கீழிருந்த பெரும்பான்மையினரான விவசாயிகளைக் கொத்தடிமைகளாகவும், சாதிய ரீதியிலும் ஒடுக்கவுமே செய்தனர்.

**இந்த வகையில் பார்ப்பனீய வர்ணாசிரம தர்மங்களை முற்றாக தாங்கிப் பிடித்துக் காத்தனர்.** பார்ப்பனரல்லாத தருமபுரம், மதுரை, குன்றக்குடி, திருப்பனந்தாள் போன்ற மடாதிபதிகளும் ஆதீனகர்த்தாக்களும் பார்ப்பனீய வர்ணாசிரமத்தை வழுவாது விடாப்பிடியாக காத்தனர். பின்னாளில், நீதிக்கட்சிக்கு வெளியே, அதோடு எவ்வித தொடர்புமின்றி தோன்றிய பெரியாரின் சுயமரியாதை மற்றும் பகுத்தறிவு இயக்கத்தை நீதிக்கட்சியினர் ஒரு போதும் ஏற்றுக் கொண்டதில்லை. அதிகாரப் பதவி, வெறி, போட்டி, உள்முரண்பாடுகள், லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளால் நீதிக்கட்சி செல்வாக்கிழந்து வீழ்ந்துவிட்ட நிலையில் பெரியாரின் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் அதை உயிர்ப்பிப்பதற்கு நீதிக் கட்சியினர் முயன்றனர். அப்போதும் பார்ப்பனீய வர்ணாசிரம சாதியத்துக்கு எதிராக அவர்கள் நிற்கவே இல்லை.

மாறாக, மைலாப்பூர் பார்ப்பனக் கும்பலைப் போன்றதொரு கட்டுமானமும், தொடர்பு வலைப்பின்னாலும், அரசியல் நோக்கமும் கொண்டதுதான் நீதிக்கட்சி கும்பலும். ஆங்கிலேய காலனிய அரசின் கடைக்கண் பார்வை பெறவும், புதிதாகப் பகிர்ந்தளிக்கப்படவிருந்த அதிகாரத்தில் ஆதாயம் தேடவும் விரும்பியது. நீதிக்கட்சியே அதிகார பூர்வமாக வெளியிட்ட "நீதிக்கட்சி வரலாறு" என்கிற சிறு நூலில் இதை அப்பட்டமாக ஒப்புக் கொள்கிறார்கள். அச்சிறு நூல் திராவிடர் கழகத்தால் விற்பனை செய்யப்படுகிறது. ஆனாலும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்துக்கெதிரான திராவிடர்களின் வகுப்புரிமைப் பேரியக்கமாக நீதிக்கட்சியை வீரமணி போன்றவர்கள் இன்னமும் சித்தரித்து வருகின்றனர்.

இவ்வாறு, ஆங்கிலேய காலனிய அரசுக்கு விசுவாச ஊழியஞ் செய்து அதிகார எச்சிலுக்காக பார்ப்பனக் கும்பலும் நீதிக்கட்சிக் கும்பலும் நடத்திய போட்டியை, அரசியல் தகிடு தித்தங்களை வாஷ்புருக், பேக்கர், இர்சிக் போன்ற ஆராய்ச்சியாளர்கள் ஏராளமான ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளனர். "விடுதலைப்போரும் திராவிட இயக்கமும்" பற்றி எழுதத்துணிந்த ராமமூர்த்தி உண்மையான கம்யூனிஸ்டாக இருப்பின் பார்ப்பன, நீதிக்கட்சி கும்பல்களின் தேச துரோகத்தை அல்லவா அம்பலப்படுத்தியிருக்க வேண்டும்! ஆனால் அவரோ கம்யூனிச துரோகி. அடிப்படையில் காந்தீய—காங்கிரசு—பார்ப்பனீயவாதி! எனவேதான் மைலாப்பூர்—எழும்பூர் பார்ப்பன கும்பல்கள் இருந்ததையும், காங்கிரசு—ஹோம்ரூல் இயக்கங்களிலும் காலனிய அரசுக்கு அவை செய்த விசுவாச ஊழியங்களையும், குறிப்பாக மைலாப்பூர் பார்ப்பனக் கும்பலின் ஆதிக்கத்தையும் அடியோடு மூடி மறைத்துவிட முயல்கிறார். அடுத்தடுத்து பல வரலாற்றுப் புரட்டுகள் செய்து காந்திய—காங்கிரசு—பார்ப்பனக் கும்பல் செய்த தேசத் துரோகங்களையெல்லாம் மாபெரும் - விடுதலைப் பேரியக்கமாக சித்தரிக்கிறார். **அவை பற்றித் தொடர்ந்து அலசுவோம்.**

(தொடரும்)

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600015. அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம்பிரஸ், 107-[illegible], பெரியார் பாதை (மேற்கு) சென்னை—600014

படிப்பகம்

www.padippakam.com



பொதுச் சொத்து நாசம்

# இதுதான் இன்றைய இந்தியா

இதோ, இவர்கள் 'கண்ணியம் மிக்க பாரம்பரியத்தில் பிறப்பெடுத்த தமிழக சட்டமன்றத்தின் பெருமை மிகு உறுப்பினர்கள். ஜனவரி 28ந் தேதி ஜானகி மந்திரிசபைக்கு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தில் பங்கு கொண்டு தங்கள் 'ஜனநாயக உரிமைகளை' வெளிப்படுத்திய வீரர்கள். அரசியலை அரசியலால் சந்திக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையின் நேரடி வாரிசுகளான இவர்கள்—ஜானகி மந்திரி சபையை கவிழ்க்கவும்—தூக்கி நிறுத்தவும் கடைபிடித்த வழி முறைகளால் நாடாளுமன்ற ஜனநாயகம் தனது முன்னேற்ற பாதையில் மேலும் ஒரு மைல் கல்லை எட்டியது!

கட்டிப் புரள்வது, வேட்டியை அவிழ்ப்பது, செருப்பை வீசுவது ஆபாச சைகைகள் காட்டுவது என்பதாக இருந்த தமிழக சட்டமன்ற நடவடிக்கைகள், அடுத்த கட்டத்திற்கு தாவி ஒலிவாங்கியை உருவிக் கொண்டு தாக்குவது, சைக்கிள் செயின் சுழற்றுவது, சோடா பாட்டில் வீசுவது, 'பெல்'ட்டால் விளாசுவது, குண்டர்களை இறக்குவது, போலீசை வரவழைத்து விடுவது, சட்டமன்ற அலுவலக பொருட்களை சூறையாடுவது; என்பன போன்ற பலமுனை நடவடிக்கையாக விரிவடைந்துள்ளது.

இதற்கு நேரடி பொறுப்பேற்று 'ஆயுத'ங்களை தருவித்து 'தர்ம' யுத்தத்தை 'சிறப்பான' முறையில் நடத்திக் காட்டிய பெருமைமிகு உறுப்பினர்கள், இப்போது சொரணையற்று வேட்டியை விலக்கி, கிழிந்த தொடையையும், கழண்ட முட்டையும் காட்டி அடுத்தவன் அடித்துவிட்டதாக ஊர் முழுக்க புலம்பித் திரிகிறார்கள்.

இதோ! எடுத்துக் கொடுத்து சிவந்த கரம் எம்ஜிஆர் திடீரென மண்டையைப் போட்டுவிட்டதால், இனி தாங்களே எடுத்துக் கொள்வது என முடிவெடுத்து அவருடைய ரத்தங்கள் சென்னை—மவுண் ரோடில் சூறையாடும் காட்சி.

மதுபான கடைகள் விளையாட்டுப் பொருட்கள், மிகப் பெரும் துணிக் கடைகள், 'பேக்கரி'களில் இருந்த கேக்குகள், மோட்டார் உதிரிபாகங்கள் எதையும்விட்டுவைக்கவில்லை. பகிரங்கமாக ஆயுதங்களை ஏந்தி நகர்வலம் வந்து, கண்டவர்களை மிரட்டி கண்ணில் பட்டதை சுருட்டினார்கள்.

"தலைவன் எவ்வழி தொண்டன் அவ்வழி" என்பதை சும்மாவா சொன்னார்கள். எம்ஜிஆரின் சாதாரண எடுபிடிகளே சமூக விரோதிகளாகவும், அராஜகவாதிகளாகவும் இருக்கும்போது, இவர்களுக்கு தொழில் பழக்கிய எம்ஜிஆரின் குணாம்சத்தை எதில் சேர்ப்பது?

பாசிஸ்ட்டுகளை பாசத்துக்குரிய தலைவர்களாகவும் அவர்களது எடுபிடிகளின் முடிவில்லாத அட்டகாசங்களை அரசியல் வாண வேடிக்கையாகவும் ஏற்றுக்கொள்வதை மாற்றிக் கொள்வது எப்போது?



கடைகளில் சூரையாடிய பொருட்கள்

படிப்பகம்